Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 20 ஞாயிற்றுக்கிழமை (03.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 215

## அபிவிருத்தியின் தேசமாக மாற புதிய சந்தர்ப்பத்தை தேடுகிறது இலங்கை



இந்து சமுத்திரத்தின் முத்து என்ற பிரபலம் பெற்ற இலங்கையில் வாழும் நாங்கள் எமது தாயகத்தை புதிய சந்தர்ப்பங்களால் அபிவிருத்தியின் தேசமாக மாற்ற வேண்டும் என்பதற்காக அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

சுதந்திரத்திற்கான போராட்டத்தில் சகல இலங்கையர்களும் இன்,மத, குல பேதங்கள் இன்றி வானவில் புரட்சிக்காக அணிதிரண்டதுடன், இந்தப் போராட்டம் ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் பின்னர், இலங்கைக்குள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில் நிறைவுபெற்றது.

இலங்கைக்குள் ஏற்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

அமெரிக்கா என்பது சந்தர்ப்பங்களின் தேசம் என்பதை முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையும் அபிவிருத்தியின் தேசமாகமாற புதிய சந்தர்ப்பத்தையும் எதிர்பார்ப்பையும் தேட ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்ட அமைதியான மற்றும் ஜனநாயக புரட்சியானது அரபு புரட்சிக்கு மாறானது என்று அடையாளப்படுத்த முடியுமென வெளிவிவகார அமைச்சர், மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நேற்று நடைபெற்ற அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் ஹெரி கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அமைசசர் இதனைக் கூறியுள்ளார்.

## பொறுப்புக்கூறும் விடயங்கள்; தீர்வுகாணும் அரசாங்கம்

### ஹெரியிடம் உறுதியளிப்பு

இலங்கையில் நடைபெற்று முடிந்த போருடன் தொடர்புடைய பொறுப்புக்கூறல் விவகாரங்களுக்கு தீர்வு காணப்படும் என்று, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரியிடம் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன், அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி நடத்திய பேச்சுக்களின் போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலருடனான சந்திப்புக்குப் பின்னர், நடத்திய செய்தியாளர் சந்திப்பில், கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர,

புதிய இலங்கையின் நல்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊழலைக் கட்டுப்படுத்த உதவவேண்டும் அமெரிக்கா

### ஹெரியிடம் கோரிய ஜனாதிபதி




(கொழும்பு)

இலங்கைப் பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகளுக்கு ஊழல்களை கட்டுப்படுத்துவது குறித்து அமெரிக்கா பயிற்சியளிக்க வேண்டுமென விடுத்த வேண்டுகோளை அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன்ஹெரி உடனடியாகவே ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி நேற்றுப் பகல் ஜனாதிபதி மைத்திரிபாலவை. ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து

19 ஆம் பக்கம் பார்க்க

# அதிகாரப்பகிர்விற்கு அமெரிக்கா அழுத்தம்



(கொழும்பு)

இலங்கையில் தற்போது அதிகாரப் பகிர்வு அவசியமென அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி தெரிவித்துள்ளார்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக் காலை இலங்கைக்கு விஜயம் செய்த ஹெரி நேற்று மாலை தாஜ்சமுத்திராஹோட்டலில். நடாத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகள் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து செயற்படுமாறு அமெரிக்கா, இலங்கையை வலியுறுத்தியுள்ளது.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான உண்மை கண்டறியப்பட வேண்டியது அவசியமானது.

இலங்கை உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையீடு செய்வதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

இலங்கையுடன் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது இலங்கை அமெரிக்காவின் நட்பு நாடு.

அரச சொத்துக்கள் மோசடி செய்யப்பட்டமை சொத்துக்குவிப்பு தொடர்பில் உதவிகளை வழங்கத் தயார்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட உள்ள மாற்றங்களுக்கு தொழில்நுட்பம் சார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கத்தயார்.

கடந்த அரசாங்கத்துடன் மிக நெருக்கமான உறவுகள் பேணப்படாத போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிப்பட்டதனை அமெரிக்கா வரவேற்கிறது

19 ஆம் பக்கம் பார்க்க

## தேசிய நல்லிணக்கத்தை கட்டி யெழுப்புவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்

### அழைப்பு விடுக்கிறார் டக்ளஸ்



யுத்தம் வெற்றி கொள்ளப்பட்டாலும், வடக்கிற்கும் தெற்கிற்குமிடையிலான நல்லிணக்கம் போதுமானளவு வளர்க்கப்படவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்த நிலையில் நாம் அனைவரும் இன, மத, கட்சி பேதங்களை மறந்து தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமென ஈ. பி. டி. பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த அவர்,

உழைக்கும் மக்களின் உரிமை தினமாகிய மேதினத்தில் ஈ. பி. டி. பி. கட்சியின் சார்பில் நான் கலந்து கொண்டிருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சமாதானப்புறாக்களை முதன் முதலில் ஏந்தி வந்தவர்கள் நாங்கள். உறவுக்குக் கரம் கொடுத்து, எமது மக்களின் உரிமைக்குக் குரல் கொடுத்து,

உண்மையாகவும், நேர்மையாகவும் உறுதியுடன் உழைத்து வருபவர்களும் நாங்களே.

19 ஆம் பக்கம் பார்க்க

## இயற்கை வள அபிவிருத்தி வடமாகாணத்தில் நடவடிக்கை

வட மாகாணத்தின் காட்டுச் செல்வழிகள், இயற்கை ஒதுக்கிடங்கள், சரணாலயங்கள் மற்றும் வன ஜீவராசிகள் தேசிய பூங்காக்களை அமைக்க சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

30 வருட யுத்தம் நிறைவடைந்த பின்னர் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது சூழலைப் பாதுகாத்தல், அடிப்படை வசதிகளை வழங்குதல் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் தவறி விழுந்து பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையப்பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்றுச்சனிக்கிழமை கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். குருந்துவத்தை புரன மிரிகம பிரதேசத்தினைச் சேர்ந்த சுனில் சந்த (வயது 45)என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ். பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் தங்குமிடத்திற்கு பின்புறமாக உள்ள கிணற்றில் குளிக்கச் சென்ற வேளையிலேயே கிணற்றில் தவறி விழுந்துள்ளார் கிணற்றில் நீர் குறைவாக இருந்துள்ளதினால், தலையில் பலமாக

19 ஆம் பக்கம் பார்க்க

## பௌர்ணமி திருவிழா

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பௌர்ணமி திருவிழா இன்று இடம்பெறுகிறது.

இத் திருவிழாவில் தூக்குக் காவடி, பறவைக்காவடி, பாற்செம்பு போன்ற நேர்த்திக் கடன்களில அடியவர்கள் ஈடுபட முடியும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இத்திருவிழாவிற்கு பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் விசேட போக்குவரத்து சேவைகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## தெளிவூட்டல் கருத்தரங்கு

யாழ்.வணிகர் கழகமும் பிராந்திய சுகாதார திணைக்களமும் இணைந்து நடாத்தும் தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் மாலை 3.30 மணிக்கு 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் இடம்பெறவுள்ளது. இத் தெளிவூட்டல் கருத்தரங்கானது யாழ்ப்பாணத்தில் பெருமளவில் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் போலி மருந்துப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டு வருவதாகவே இக்கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அழகு சாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவ பொருட்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகத்தினரும் சுகாதார திணைக்கள்தினரும் தெரிவித்துள்ளனர்.

# ஏமாற்றப்படுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்று அரசியல் செய்பவர்களும் இருப்பார்கள்

## வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நான் இளைஞனாக இருந்த போது வீ.பொன்னம்பலம், கார்த்திகேசு மாஸ்டர் ஆகியோரின் பல கருத்தரங்குகளில் பங்குபற்றி இருக்கின்றேன். உழைப்பாளி வர்க்கத்தின் நலன்களை முன்னிறுத்தி நாம் எமது அரசியல பயணத்தை தொடர வேண்டும் என்ற அவர்களின் தர்க்கரீதியிலான விளக்கங்களினால் கவரப்பட்டு இருந்தேன். ஆனால் தமிழரசுக் கட்சி தலைவர்களின் உணர்ச்சியூட்டும் ஆவேசப் பேச்சுக்கள் என்னை அரசியலில் திசை மாறச் செய்தது.

உணர்ச்சிபூர்வமான வாசகங்களின் மூலம் அரசியல் இருக்கையை உறுதி செய்வதற்காக 1960 பிற்பகுதியிலும் 1970களின் ஆரம்ப காலங்களிலும் இளைஞர்களை தூண்டியவர்கள் தமிழ் அரசுக் கட்சியின். அவர்களின் அரசியல் விழுமியங்களில் ஒன்றான தமிழர் விடுதலைக் கூட்டணியும் இன்றும் அதனையே செய்து கொண்டு இருக்கிறது. இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரால் மானிப்பாய் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மேதின விழாவில் உரையாற்றும் போது வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

2013 செப்ரெம்பர் மாதம் வட மாகாண சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனத்திலும், தேர்தல் பிரசார உரைகளிலும் முதலமைச்சர் வேட்பாளரும் ஏனையோரும் தங்களுக்கு வாக்களிபதன் மூலம் வட மாகாண சபையில் 2/3 பெரும்பான்மையினை தருகின்ற பட்சத்தில் இராணுவத்தை வடக்கில் இருந்து வெளியேற்றுவார்கள் எனவும் படைகள் வசமிருக்கும் பொது மக்களின் காணிகளை விடுவிப்போம் என்றும் பிரசாரம் செ[illegible]திருந்தனர். ஆனால் இன்று வட [illegible]ாகாண சபையில் அவர்கள் ஆட்சியேறி 1½ வருடங்கள் ஒழிந்த நிலையில் அவர்களால் ஒ[illegible]ாணுவ சிப்பாயை தன்ஒ[illegible] மாற்ற முடிந்ததா? நாங்கள் அவ்வாறாக பொய் பிரசாரங்கள் செய்து வாக்குகளை கேட்கவில்லை. யாழ்ப்பாணத்தில் [illegible]ாணுவ வசமிருக்கும் பொது[illegible]ின் ஏறத்தாழ 9,000 ஏக்கர காணியில் இது வரை 400 ஏக்கர் காணியே விடுவித்துள்ளனர்.

ஆனால் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே மாதகலில் இருந்து காங்கேசன் துறை வரை ஏறத்தாழ 3,000 ஏக்கர் காணிகளை விடுவித்திருக்கின்றார்.

கடந்த வியாழக்கிழமை வட மாகாண சபையில் ஓர் பிரேரணை கொண்டு வரப்பட்டது. அப் பிரேரணையில் இலங்கை அரசு இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாது என்றும் அதனால் ஐக்கிய நாடுகள் சபையும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளும் தலையிட்டு இனப் பிரச்சினைக்கான தீர்வைத் தர வேண்டும் என்றும் அப்பிரேரணையில் கோரப்பட்டிருந்தது. நான் அவர்களிடம் கேட்டிருந்தேன் உங்கள் கட்சியின் தலைவர் அரசின் அதி உயர் கொள்கை வகுக்கும் நிறைவேற்று சபையில் அங்கம் வகிக்கின்றார்.

அது மட்டுமல்ல தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பான எந்த வித தீர்வையும் முன் வைக்காத 19 ஆவது திருத்தச் சட்டத்தை உங்கள் கட்சியை சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்தான் வரைந்திருக்கின்றார். அத்துடன் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர் ஏனைய அரச முக்கியஸ்தர்களுடன் ஊர்வலமும் போய் இருக்கின்றார்.

நீங்கள் இதயசுத்தி உள்ளவர்களாக இருந்தால் அங்கு ஒரு வேடமும் இங்கு மக்களை ஏமாற்றுவதற்காக இங்கொரு வேடமும் போடாதீர்கள். அவர்களிடம் நான் மேலும் கேட்டிருந்தேன் உங்கள் கட்சியின் தலைவர் நிறைவேற்று சபையில் அங்கம் வகிப்பதில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும். உங்கள் கட்சி அரசிற்கு அளிக்கும் ஆதரவை வாபஸ் பெற வேண்டும் என்பதனையும் சேர்த்து இப் பிரேரணையை கொண்டு வாருங்கள் எம்மால் ஆதரவு வழங்க முடியும். இல்லையேல் முடியாது என்று நான் அங்கு குறிப்பிட்டிருந்தேன்.

வட மாகாண சபையில் செய்வதற்கு எவ்வளவோ இருக்கின்றது. அதை செய்யாமல் முதலமைச்சர் இந்திய பிரதமர் மோடிக்கு இளம் பெண்களை வன்புணர்வுசெய்து கொலை செய்தமை போன்ற பாரிய குற்றச்சட்டுக்கள் மரபணு சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்ட நிலையில் சிறையில் ஆயுட் கைதிகளாக இருக்கும் பிரேமானந்தா சுவாமியின் சிஷ்யர்களை விடுவிக்கும் வண்ணம் கடிதம் எழுதியுள்ளார். அதற்குப் பதிலாக எனக்கு முன் பேசிய கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்தின் தலைவர் சூரியகுமார் குறிப்பிட்ட இந்திய மீனவர்களின் அடாவடித் தனங்களினால் அல்லலுறும் இலங்கை மீனவர்கள் தொடர் பான பிரச்சினையைப் பற்றி எழுதி இருக்கலாம்.

ஏமாற்றப்படக்கூடியவர்கள் இருக்கும் மட்டும் இவ்வாறு ஏமாற்று அரசியல் செய்பவர்கள இருந்து கொண்டேதான் இருப்பார்கள். இவ்வாறு அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.


## இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும்



## இயல், இசை, நாடக விழா 2015



இடம்: இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம், இல. 63,கல்லூரி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம்.
காலம் : 30-04-2015 — 04-05-2015
நேரம் : பிற்பகல் 4.00 மணி

### 03.05.2015 நான்காம் நாள்

**தலைவர்**
திரு.கு.பாலஷண்முகம்
(விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

**பிரதம விருந்தினர்**
கௌரவ. திருமதி. விஜயகலா மகேஸ்வரன் ஐ.தே.க (பா.உ)
(மகளிர் விவகாரப் பிரதி அமைச்சர்)

**பி.எஸ்.பிச்சையப்பா ரஜிந்திரன் குழுவினர் வழங்கும் மங்கல இசை**

**மங்கல இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| பிச்சையப்பா ரஜிந்திரன் | ஆர்.வசந்மோகன் (சுதா) |
| ரஜீந்திரன் சாகித்தியன் | பி.பாலசங்கர் |

**மங்கல விளக்கேற்றல்**
**திரு.ப.சிவபாஸ்கரன்**
(உரிமையாளர்-சாரங்கா நகைமாடம்)
**திரு.ச.ஜெகதீஸ்வரன்**
(உரிமையாளர் - நியூநதியா நகைமாடம்
**திரு.க.ஜெயசீலன்**
உரிமையாளர்-தனம் ரெக்ரைல்ஸ்
**தேவாரம்:** செல்வி.சித்திரா .கந்தசாமி
**ஆசியுரை:** மௌலவி அப்துல் அசீஸ் (காசிமி)
தலைவர். அகில இலங்கை ஜம்பியதுல் உலமா
யாழ். கிளிநொச்சி மாவட்டம்)
**வாழ்த்துரை:** கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன்
(ஓய்வுநிலை விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியகலாசாலை)

**கெஞ்சிரக்சேரி**

நாதஸ்வரம்- பி.எஸ்.பாலமுருகன்
வயலின்-எஸ்.கோபிதாஸ்
தவில்-எஸ்.செந்தில்நாதன்
மிருதங்கம்-நல்லை ஜி.கண்ணதாஸ்
கடம்-ஜி.வசந்
முகர்சிங்-எஸ்.சதீஸ்குமார்

**உடுவில் நிருத்திய நிகேதன் நாட்டியாலய மாணவிகள் வழங்கும்**

**நாட்டிய அர்ப்பணம்**
நட்டுவாங்கம்- ஸ்ரீமதி சோபனா சுதாகரன்
பாட்டு- திரு.சி.விபிஷன்
வயலின்- திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்- திரு.சி.செந்தூரன்
கீ.போட்- திரு.எல்.நிமலன்
உடுக்கு- திரு.கே.சுதாகரன்

**குரலிசை**
பாட்டு-திரு.எஸ்.அமிர்தசிந்துஜன்
வயலின்-திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்-திரு.எஸ்.அமிர்தலோஜன்
கெஞ்சிரா- திரு.சிவசுந்தரசர்மா
கடம்- திரு.க.தேசிகன்

**ஏழாலை அபிநயா கலாசாலை மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி**

நட்டுவாங்கம்- ஸ்ரீமதி ஜெயந்தி சுகிர்தன்
பாட்டு-திரு.எஸ்.அமிர்த்லோஜன்
வயலின்-திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்-திரு.சி.மகேந்திரன்

**கலைஞர்கள் கௌரவிப்பு**

**பிரதம விருந்தினர் உரை**

**இணுவில் கந்தவாமி கோவில் இளம் தொண்டர் சபை இசை வகுப்பு மாணவர்கள் வழங்கும்**

**வள்ளிதிருமணம் (இசைநாடகம்)**

**நன்றியுரை**

அனுசரணை-N.E.C. கல்வி நிலையம்
மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்
(3857)





## 3 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன்-எஸ்.டாஷன்
### 03.05.2015



நாபாவின் வழிகாட்டலிலும்
தேவாவின் சேவையிலும்
யேசுபிரானின் ஆசியுடனும்
நாகபூசணி அன்னையின் பேரருளும்
புத்த பிரானின் கருணையும்
நபிகள் நாயகத்தின் நல்லாசியும் நிறைந்து
பல்லாண்டு காலம் வாழ்க

**தோழர்-ராம்.மாலா**
**குடும்பத்தினர்**
**வேலணை**
(C/3860)

# தவறான முறையில் இடமாற்றங்கள் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையேற்படும்

## எச்சரிக்கும் தொனியில் அன்ரன் ஜெகநாதன் தெரிவிப்பு

(கைதடி)

கடந்த ஆளுநரது காலத்திலே மேற்கொள்ளப்பட்ட தவறுகள் தற்போதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மாற்றம் வேணடும். இலையேல் இது விடயத்தில் ஆளுநரிடம் தாங்கள் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். எங்களுடைய ஜனநாயக கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் தவறான முறையிலே இடமாற்றங்களை வழங்கினால் அதை சுட்டிக்காட்ட வேண்டிய நிலை ஏற்படும் என வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரன் ஜெகநாதன் எச்சரிக்கும் தொனியில் தெரிவித்தார்.

மூத்த அதிகாரிகள் இருக்கும் போது நீங்கள் குறைந்தவர்களை நியமிப்பது போன்ற விடயங்கள இடம்பெறுகின்றன. கடந்த ஆளுநர் செய்த தவறை நாங்களும் செய்கிறோம. உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படவேண்டிய நியமனங்கள் கூட ஆளுநரிடம் பேசி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் உள்ளூராட்சி அமைச்சின் அசமந்தமே. இதனால் நாம் ஆளுநரிடம் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தவறான இடமாற்றங்கள் தற்போதும் இடம்பெறுகின்றன. இது விடயத்தில் நாம் சுட்டிக்காட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை மாறவேண்டும். நாங்கள் கடந்த 20 ஆம் திகதி வழங்கிய கடிதத்திற்கு இன்னும் பதில் இல்லை. பல விடயங்கள் சுட்டிக்காட்டினோம். 6 மாதமாகியும் விசாரணைக் குழு என்ன செய்கின்றது. மக்கள் கேட்கிறார்கள். நாம் பதிலளிக்க முடியாது இருக்கிறோம். மோசடிப் பேர்வளிகளுக்கு நாங்களே பதவி உயர்வு வழங்கி இருக்கிறோம்.

இது நியாயமான வேலை அல்ல அமைச்சர்கள் உரிய முறையில் செயற்படா விட்டால் இதற்கு எதிராக குரல்கொடுக்க வேண்டியேற்படும். முதலமைசசருக்கு நாங்கள் கொடுத்த கடிதத்திற்கே பதில் இன்னும் இல்லை. உள்ளூராட்சி திணைக்களத்தை பொறுத்த வரையில் நியாயமாக செயற்படவேண்டும்.

இந்த சபையிலே எமக்கு நியாயம் கிடைக்காத நிலையில் நாம் ஆளுநரிடம் சென்று நியாயம் பெற்றுள்ளோம். எனின் ஏன் நாம் இங்கு கத்தவேண்டும். நாம் இனி எல்லாவற்றுக்கும் அங்கே போவதா? சொல்லுங்கள் போகிறோம். நாங்கள் இங்கிதமாக நடந்துகொள்ள வேண்டும். மக்கள் மடையர்கள் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நிறைய தவறுகள் இடம்பெறுகிறது. நியமனங்கள், இடமாற்றங்களில் தவறுகள் ஏராளமாக இடம் பெறுகின்றன. இந்த சபையிலே நீங்களே பேசுகிறீர்கள் நீங்களே வேறு மாதிரி தீர்மானிக்கிறீர்கள் இது மிகத் தவறானது என அன்ரனி ஜெகநாதன் மாகாண சபையின் செயற்பாடுகள் குறித்து கடுமையாக சாடினார். (இ)

# கணனிக் கல்வியை வழங்கும் அராலி 'நெனசல' அறிவகம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு "நெனசல" அறிவகம் ஊடாக வலி.மேற்கில் உள்ள மாணவர்கள், அரசாங்க நிறுவனங்கள் முழுமையாக பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றன.

அராலி நெனசல அறிவகத்தின் தலைவராக க.சர்வானந்தனும், செயலாளராக கே.ஞானசேகரமும் முழுமையாக பங்களித்து வருகின்றனர்.

இங்கு மாணவர்களுக்கான கணனி கல்வி, வளர்ந்தோருக்கான கணனி கல்வி, சிறுவர்களுக்கான கணனி கல்வி, போட்டோ பிரதி, லெமெனேற்றிங் வைண்டிங், விளம்பரம், டிசைனிங் போன்ற பல்வேறு சேவைகள் மானியவிலையில் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக அரசாங்க நிறுவனங்களின் கீழ் செயற்படும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகஸ்தர்கள், சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள், கிராம அலுவலர்களின் வேலைகள் முன்னுரிமை பிரகாரம் முன்னுரிமைப்படுத்தப்படும் என அதன் இணைப்பாளர் இளங்கீரன் தெரிவித்தார். (92)

# வைத்திலிங்கம் கமலநாதனுக்கு நவாலியில் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

லயன்.வைத்திலிங்கம் கமலநாதனுக்கு 2014 இல் வழங்கப்பட்ட கலாபூஷண விருதினை கௌரவிக்கும் முகமாக பாராட்டு விழா நவாலியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

முருகானந்தா சனசமூக நிலைய தலைவர் கு.சிவலிங்கம் தலைமையில் விழா இடம்பெற்றது.

40 இற்கும் மேற்பட்ட நாடகங்களிலும், குறுந்திரைப்படங்களிலும் பெயர் பெற்ற நகைச்சுவை நடிகர் வை.கமலநாதனின் தனி நடிப்புத் திறனை பாராட்டி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பாராட்டுப்பத்திரம், விருது வழங்கிக் கௌரவித்தார்.

அன்றைய தினம் வறிய நிலையில் உள்ள குடும்பங்கள் 2 பேருக்கும், நவாலி நல்லாயன், வை.எம்.சீ.ஏ.முருகானந்தா ஆகிய மூன்று சனசமூக நிலையங்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நடிகர் வை.கமலநாதனின் உருவாக்கத்தில் வெளியான வேலி நாடகம் (அப்பச்சி மகாலிங்கம்) பார்வையாளர் அரங்கில் திரைமூலம் போட்டு காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு சிறப்பு அதிதிகளாக முன்னாள் அதிபர் சி.நாகையா, சமூகசேவகர் செ.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். (92)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மே தின நிகழ்வுகள் இல்லை

## அதிர்ச்சிக்குள்ளாகும் மக்கள்

(முல்லைத்தீவு)

தமிழ் அரசியல் கட்சிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேதின நிகழ்வுகளை முன்னெடுக்காமை அப்பகுதி மக்களை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கையில் பல இடங்களில் தொழிலாளர் தின பேரணிகள் மற்றும் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் எந்த வித பேரணிகளோ, கூட்டங்களோ இடம்பெறவில்லை.

தமிழ்த் தேசியம் பேசும் எந்த அரசியல் கட்சிகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேதின பேரணிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கவில்லை.

வடமாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி கூட்டுறவாளர்கள் மாபெரும் பேரணி ஒன்றினை யாழ்.கிட்டு பூங்காவில் முன்னெடுத்தனர்.

இவ்வாறு அரசியல் கட்சிகள் பல யாழ்.மாவட்டத்தில் தமது பேரணிகளையும், கூட்டங்களையும் நடாத்த தீர்மானித்து பேரணிகளையும், கூட்டங்களையும் நடாத்தினார்கள்.

இறுதிப் போரின் போது, தமிழ் மக்கள் அதிகளவானோர் படுகொலை செய்யப்பட்டார்கள். இனப்படுகொலை என்றும், முள்ளிவாய்க்கால் தினம் என்றும் தினங்களை கொண்டாடுபவர்கள், ஏன் தொழிலாளர் தினத்தினை முல்லைத்தீவில் நடாத்துவதற்கு தீர்மானிக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

விவசாய மக்கள் மற்றும் கூலித் தொழிலாளிகள் அதிகமாக இருக்கும் முல்லைத்தீவு பிரதேசத்தில் தொழிலாளர் வர்கத்தினை ஒன்றிணைத்து தொழிலாளர் தினத்தினை முன்னெடுக்கவில்லை.

இவ்வாறு தொழிலாளர் தினதில் தம்மை புறக்கணித்து அந்த மாவட்டத்தில் தொழிலாளர் தினத்தினை முன்னெடுக்காமல் அரசியல் கட்சிகள் தம்மை புறககணித்துவிட்டதாகவும் அந்த பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஏன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழிலாளர் தின நிகழ்வுகளை முன்னெடுக்கவில்லை என்றும் கேள்வி எழுப்பியதுடன், பெரிய ஏமாற்றமென்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (25)

# கண்ணிவெடி அகற்றும் ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும்

## வடமாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு

(கைதடி)

உயிரைப் பணயம் வைத்து கண்ணிவெடியகற்றலில் ஈடுபட்ட இளைஞர், யுவதிகள் தற்போது வேலையிழந்து நிர்க்கதியற்ற நிலையில் உள்ளனர். இவர்களை அமைச்சரவையின் அறிக்கையினூடாக நிறைய வேலைவாய்ப்புக்களை வழங்கப்படுகின்றது. இதற்ச [illegible] களை எங்கிருந்து எடுக் [illegible]ார்கள் என்பதும் புரி[illegible]வில்லை. அவ்வாறான வேலைவாய்ப்புக்களுக்கு இவர்களை முன்னுரிமைப்படுத்தி வேலை [illegible] நடவடிக்கை எடுக்கப்ப[illegible]ண்டும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன் கடந்த வியாழக்கிழமை மாகாண சபை அமர்வின் போது கேட்டுக்கொண்டார்.

தற்போது இரணைமடு குளப் புனரமைப்பு அதிக நிதியூட்டத்துடன் வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இவ்வாறான பல வேலைத்திட்டங்களுக்குள் முன்னாள் போராளிகள், கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களில் வேலை செய்து வேலையிழந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்க வேண்டும்.

கண்ணி வெடி அகற்றும் நிறுவனங்களின் நிதி குறைக்கப்பட்டமையால் 450 பேர் வரையில் வேலையிழந்துள்ளனர். இவர்கள் வருமானத்திற்காக மட்டும் இதனைச் செய்யவில்லை. சேவையாகவும் செய்துள்ளனர். தமது உயிரைப் பணயம் வைத்து செய்துள்ளனர். இன்று வேலையிழந்துள்ள நிலையில் இவ்வாறானவர்களின் குடும்பங்கள் கஷ்ர நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

இன்று மக்களின் மீள் குடியமர்வுக்கும், சுதந்திரமான நடமாட்டத்திற்கும், உதவிய இந்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனப்பணியாளர்களுக்கு அமைச்சரவையூடாக அறிவிக்கப்படும் வேலைவாய்ப்புகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

இது ஒரு முக்கியமானதும் அவசியமானதுமான விடயமாக கவனத்தில் கொள்ளவேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார். (இ)



புங்குடுதீவு. சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டுவிழாவும், சாதனையாளர் கௌரவிப்பும் கடந்த புதன்கிழமை இடம்பெற்றதைக் காணலாம். (48)

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## செக்குச் சுழலிலிருந்து வெளிவருதல்!

இன்று உலக பத்திரிகை சுதந்திர தினம். பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் கருத்து சுதந்திரத்தை கட்டிக்காப்பது பற்றி உணர்த்தும் விதமாக மே 3ஆம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. சமூக மாற்றத்திற்கு பத்திரிகை சுதந்திரம் அவசியம் என்பது மையக்கருத்தாக உள்ளது.

நமது சூழலில், ஊடக சுதந்திரம் பற்றி எண்ணினாலே, "ஊடகங்களுக்குச் சுதந்திரத்தை விட இன்று முக்கியமானது ஊடகங்களிடமிருந்து மக்களுக்குச் சுதந்திரமே" என்று சொன்னவரின் வாக்கே தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகிறது.

நமது மக்களின் உண்மை அறியும் சுதந்திரத்தை இன்று பெருமளவில் பறித்துக் கொண்டிருப்பவை ஊடகங்கள்தான் என்பதில், சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு ஒருவகையிலும் சந்தேகமிருக்காது.

நடப்பதை உள்ளபடியோ, நடைமுறைக்குச் சாத்தியமான எதிர்பார்ப்புகளையோ மக்களுக்குத் தருவதில்லை தமிழ் ஊடகங்கள். மக்களை உணர்ச்சிகரத்தில் ஆழ்த்தி உண்மையை அறியவிடாமற் செய்யும் தந்திரோபாயத்தையே தமிழ் ஊடகங்கள் இன்னமும் கைவிடாமல் செய்துகொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களுக்கு இன்று சாத்தியமாகக் கூடிய தீர்வு எது என்பது பற்றி இந்த ஊடகங்கள் எதுவும் பேசுவதில்லை.

தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள், பேரினவாதத்தால் அடக்குமுறைச் சுருக்குவளையம் இறுக்கப்படுகிறது, இராணுவ ஆக்கிரமிப்பு அதிகமாகிறது, நிலம் பறிபோகிறது, திட்டமிட்ட குடியேற்றங்கள் உருவாகின்றன... என்பது போன்ற அறுபது வருடக் கோஷங்களே இன்றும் அதே சுருதி மாறாமல் ஊடகங்களில் போடப்படுகிறது.

சுதந்திரன் காலத்திலிருந்து தமிழரசுக் கட்சியின் இன்றைய பத்திரிகை வரை இந்தக் கோஷங்களால் விற்பனை லாபத்தையும், சார்ந்த கட்சியினரின் நாடாளுமன்றக் கதிரைகளையும் தொடர்ந்து பார்த்துக் கொண்டனரே தவிர, மக்களுக்குப் பிரயோசனமாக எந்த ஒரு சிறு மாற்றத்தையும் ஏற்படுத்தியதில்லை.

இப்போதும் அதே வீர விளாசல்களே லாபத்தையும் கதிரைகளையும் தந்துகொண்டிருக்க, மக்கள் பேரழிவுகளையும் அன்னவாரங்களையும் பட்டதோடு இன்றும் அடிப்படை வசதிகள் முழுமையாகத் தீர்க்கப்படாமல் கஷ்டங்களுக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டை விட்டு எங்காவது வசதி வாய்ப்புகள் உள்ள நாடுகளை நோக்கி ஓடிப்போய்விட்டால் போதும் என்ற மனநிலையில் மக்களைக் கொண்டுவந்து விட்டிருப்பதே இந்த ஊடகங்களும் இவர்களது அரசியலும் செய்திருக்கும் சாதனை!

மக்களை வாழ வைக்கும் விதமான எழுத்தை – விவாதங்களை – அரசியலை இவர்கள் செய்ததில்லை. வெறுப்பையும் விரோதத்தையும் ஊட்டி, அந்த மனநிலையில் மக்களது அவலங்களை நியாயப்படுத்திக்கொள்ளும் குரூர ஊடக தந்திரமே இன்றுவரை கோலோச்சுகிறது.

அவலங்கள் மாறாமலிருப்பதற்கான பழியை மட்டும் யார் மீதாவது உணர்ச்சிகரமாகப் போட்டுவிடுவதற்கு, காலத்துக்குக் காலம் எதிரிகளைப் புதுப்புதுசாய் கண்டுபிடித்து மக்களுக்கு வழங்கியதே, எப்போதும் இவர்களை வெல்ல வைத்துக் கொண்டிருக்கும் ஒரே தந்திரோபாயம்!

தங்களை வியாபார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வெல்ல வைத்துக் கொள்ளும் தமிழ் ஊடகங்கள் ஒருபோதும் ஒரு சிறு விஷயத்திலும் மக்களை வெல்ல வைத்ததில்லை.

மக்கள் தொடர்ந்தும் அவலநிலைகளுக்குள்தான் வாழ்ந்து வருகிறார்கள் என்பதையும் இந்த ஊடகங்களே சொல்லிக் கொண்டிருக்கின்றன; அதனையே தங்களுக்கான முதலாக்கியும் கொள்கின்றன.

தமிழிலே கொஞ்சமேனும் தாங்கள் சிந்திப்பதாகக் கருதிக் கொள்வோர், தங்களது முதல் கடமையாக இந்த அபத்த சூழலைக் கண்டு கொள்வதும், எடுத்துச்சொல்லி மக்களை இந்தச் சுழலிலிருந்து வெளியே கொண்டுவர முயற்சிப்பதையுமே செய்ய வேண்டும்.

- ஆசிரியர்

# 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றாது நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சூளுரை

19 ஐ காரணம்காட்டி பொதுத் தேர்தலுக்கு செல்ல ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிக்கின்றது. 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறாது நாடாளுமன்றத்தைக் கலைக்க விடமாட்டோம் என எதிர்க்கட் சித்தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்றப்பட்டுள்ள 19 ஆவது திருத்தச் சட்டம் வரவேற்கத்தக்க விடயமே. அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருப்பது நாட்டின் அரசியல் கலாசாரத்தை மீண்டும் பாதுகாத்துள்ள வகையிலே அமைந்துள்ளது. எனினும் 19 ஆவது திருதத்தச் சட்டம் நிறைவேறியவுடன் அதைமட்டுமே கவனத்தில் கொண்டு செயற்படாது அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதிக்கான அதிகாரங்களைக் குறைப்பதினால் மட்டுமே நாட்டில் ஜனநாயகம் ஏற்படப் போவதில்லை.

சுயாதீன சேவைகள் மற்றும் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவருவதன் மூலமே முழுமையான வெற்றியாக மாற்றியமைக்க முடியும். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களின் ஆதரவுக் கட்சிகளும் 19 ஆவது திருத்தத்தை மட்டும் நிறைவேற்றி அதனூடாக சுயநல அரசியலைச் செய்ய முயற்சிக்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடம்கொடுக்க மாட்டோம்.

ஐக்கிய தேசியக் கட்சி நினைப்பதைப் போல் இப்போது நடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்லும் முயற்சியை நாம் விரும்பவில்லை. 19 ஆவது திருத்தச் சட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டதோ அதேபோல் தேர்தல் முறைமையில் மாற்றத்தினை ஏற்படுத்தும் 20 ஆவது திருத்தச் சட்டமும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அதுவரையில் நாம் நாடாளுமன்றத்தை கலைக்க அனுமதிக்க மாட்டோம்.

ஆரம்பத்தில் நாம் 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தினைப் போல் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தினையும் ஒன்றாக கொண்டுவர வேண்டும் என்ற' கோரிக்கைக்கமையவே செயற்பட்டோம்.'

ஆனால் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமையவும் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் அவசியத்திற்கு அமையவே நாம் 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்தோம் ஆனால் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமென ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு வாக்குறுதி கொடுத்துள்ளனர். அதற்கமைய கட்டாயம் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியாக வேண்டும். எனத் தெரிவித்தார்.

# பலரைப் பழிவாங்கிய மகிந்த அரசியல் அநாதையாகியுள்ளார்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

நாட்டின் முக்கிய பொறுப்புகளில் இருந்த தம்மை போன்ற பலரைப் பழிவாங்கியமையினாலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று அரசியல் களத்தில் அநாதையாகியுள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மாரஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஊழல் இல்லா நாடு என்ற தொனிப்பொருளில் ஜனநாயக கட்சியின் மேதின பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நாரஹேன பிட்டி ஷாலிகா மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வின் ஆரம்ப கட்டமாக கொழும்பு ராஜகிரிய சந்தியிலிருந்து முன்னெடுக்கப்பட்ட பேரணி பொரளை ஊடாக நாரஹேன்பிட்டி மைதானத்தை வந்தடைந்தது. பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் ஊழல் இல்லாத நாடு வேண்டும், மக்களை ஏமாற்றாத ஆட்சியாளர்கள் வேண்டும் என்றவாறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதன்போது பேரணியில் ஜனநாயகக்கட்சியின் தலைவர் பீல்ட் மாரஷல் சரத் பொன்சேகா, அவரது பாரியார் அனோமா பொன்சேகா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது தொடர்ந்தும் உரையாற்றிய சரத் பொன்சேகா, முன்பு தான் 3 முறை யுத்த பூமியில் தாக்குதலுக்கு இலக்கான போதிலும் மீண்டும் என்னைத் தயார்படுத்திக் கொண்டு யுத்தத்திற்கு சென்றேன். ஆனால் எதிர்பாராத விதத்தில் நான் அரசியல் பழி வாங்கல்களுக்கு உள்ளான போது தான் புரிந்தது. யுத்த வெற்றியை அடைய முடியாது நீண்ட காலம் தடுத்தவர் மகிந்த வென்று.

அவ்வாறு தெரிந்த போது யுத்தம்நிறைவடைந்தது. நான் சிறையில் அடைக்கப்பட்டன். அன்று அமைதியாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இன்று என்நிலை கண்டால் மகிந்தவுக்கு மூச்சுத்திணறக்கூடும்.

நான் மட்டுமல்ல, நாட்டிற்காக உழைத்த பல முக்கியஸ்தர்கள் பழிவாங்கப்பட்டனர். அதனால் தான் இன்று மகிந்தவுக்கு அரசியல் களத்தில் அநாதையாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் எண்ணங்கள் பல இன்று நிறைவேறாது போயுள்ளன. அவர் எதிர்பார்த்த மோசமானதொரு ஆட்சிக்கு மாறானதொரு ஆட்சியே இன்று இடம்பெறுவதால் அதனைக்கண்டு மகிந்த நோயாளியாக மாறியுள் ளார் எனத்தெரிவித்தார்.

# அமெரிக்க அந்தஸ்தை நீக்க கோத்தாபய தீர்மானம்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தனது அமெரிக்க பிரஜை அந்தஸ்தை நக்கிக்கொள்ள தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கியுள்ள விடயங்களுக்கமைய இரட்டைப் பிரஜாவுரிமையை கொண்டுள்ளவர்களுக்கு இனிவரும் காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலையிலேயே அவர் தனது அமெரிக்க பிரஜா உரிமையை நீக்கிக் கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக சிங்கள வார பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கோத்தாபய ராஜபகஷ போட்டியிடவுள்ளதாக கடந்த காலங்களாக செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது.

# பசில் - ரத்னதேரர் பேச்சு அரசியலில் பரபரப்பு

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான வழக்கில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள,

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்சவுடன், ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் நேற்று ஐந்து மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

பசில் ராஜபக்ச சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள, கொழும்பு தேசிய மருத்துவமனையின் கட்டண விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக, நீதியமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐந்து மணிநேரம் இருவருக்கும் இடையில் தனிப்பட்ட பேச்சுக்கள் இடம்பெற்றதை, கொழும்பு தேசிய மருத்துவமனைத் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், விளக்கமறியலில் உள்ள கைதியை எந்த நேரத்திலும் சந்தித்துப் பேசுவதற்கு சட்டத்தில இடமளிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த ஜனாதிபதி தேர்தலில், மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக பரப்புரை செய்த அத்துரலியே ரதன தேரரும், மகிந்த ராஜபக்ஷவுக்காக பரப்புரை செய்த பசில் ராஜபக்ஷவும், நீண்டநேரம் பேச்சுக்களை நடத்தியிருப்பது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தமக்கு எதிரான அணியினருடன், இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் பசில் ராஜபக்ஷ இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# பிரச்சினை தொடர்வதா? தீர்வதா? மக்கள் தீர்மானிக்க வேண்டும்

■ சங்கர சிவன்



இனப்பிரச்சினை விடயத்தில் கூட்டமைப்பு எங்கே செல்கின்றது? தமிழ் மக்கள் கேட்க வேண்டிய கேள்வி இது. கூட்டமைப்புத் தலைவர்கள் இராணுவப் பிரசன்னம், காணிகள் கையகப் படுத்தல், மீள்குடியேற்றம் போன்ற விடயங்களிலேயே அக்கறை செலுத்துகின்றார்கள். ஆவேசமான உரைகளை நிகழ்த்துகின்றார்கள். நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அவர்களுக்கு இது தேவை தான். ஆனால் இவற்றிலும் பார்க்க முக்கியமானதும் இப்பிரச் சினைகளுக்கு நியாயமான தீர்வைத் தரக்கூடியதுமான இனப்பிரச்சினை யின் அரசியல் தீர்வில் இவர்கள் அக்கறை செலுத்துவதாக இல்லை. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட ஜனநாயக அரசியலில் கூட்டமைப் புத் தலைவர்கள் இனப்பிரச்சினை யின் தீர்வுக்கு உருப்படியாக எதுவும் செய்யவில்லை.

அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். மகிந்தவின் ஆட்சிக்காலத்திலும் இதைத்தான் சொன்னார்கள். இப்போதும் இதையே சொல் கின்றார்கள். முன்னர் எதிர்ப்பு அரசி யல் இப்போது இணக்க அரசியல் இது தான் வித்தியாசம். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று தமிழ் மக்களிடம் நம்பிக் கையை வளர்த்ததற்குப் பிந்திய நிலைப்பாடு தான் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது.

ஆட்சியாளர்கள் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுகின்றார்கள் என்று ஒருபுறத்தில் பிரசாரம் செய்துகொண்டு மறுபுறத்தில் அதே ஆட்சியாளர்கள் தீர்வை முன்வைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுப்பது சிறுபிள்ளைத் தனமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் அரங்குக்கு வந்த பின் அரசியல் தீர்வுக்கான கோரிக்கையைத் தீர்வுத் திட்டமாக இன்று வரை முன்வைக்கவில்லை.

ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று கூறுவது நழுவல் கோரிக்கை. பதின்மூன்றாவது திருத்தத்தையும் ஐக்கிய இலங்கை யில் அரசியல் தீர்வு என்று யாராவது வாதிப்பதற்கு இடமுண்டு. தமிழ் மக்களின் நியாயமான அபி லாஷைகளைப் பிரதிபலிக்கக்கூடிய பிரதான விடயங்களை உள்ளடக் கிய தீர்வுத் திட்டத்தை முன் வைக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த்தலைவர்களுக்கு உண்டு.

நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்துக்கான களத் தயாரிப்பில் நீண்டகாலமாகத் தமிழ்த் தலைவர்களும் பங்காளிகளாகச் செயற்பட்ட போதிலும் புதிய ஆட்சி பற்றிய நம்பிக்கை இப்போது பெருமள வில் அவர்களிடம் இல்லை. 2015 இல் தீர்வு நிச்சயம் என்று சம்பந்தன் கூறியதை இன்றைய ஆட்சியாளரின் பின்புலத்தைப் பார்க்கும்போது அக் கூற்று வழமை போல அவரது நிறைவேறாத எதிர்வுகூறலாகவே தோன்றுகின்றது.

பதின்மூன்றாவது திருத்தத்துக்கு அப்பால் செல்லப்போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் கூறியிருக்கின்றார். பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் எழுந்த போது மௌனமாக இருந்த வர் மைத்திரிபால. எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கினால் சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க நேரும் என்று கருதியவர்கள் இப்போது நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பார்களா? அதே சிங்கள மக்கள் தானே சர்வசன வாக்கெடுப்பிலும் வாக்களிக்கப் போகின்றவர்கள்.

இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வைப் பொறுத்தவரையில் சர்வசன வாக்கெடுப்பு முக்கியமான பாத்திரம் வகிப்பது தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. பதின் மூன்றாவது திருத்தம் தொடர்பாக உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் கூட்டாக வும் தனித்தனியாகவும் வழங்கிய தீர்ப்புகளைப் படித்தால் சர்வசன வாக்கெடுப்புக்கூடாகவே சுயாட்சி அதிகாரமுள்ள அரசியல் தீர்வு நடைமுறைக்கு வரமுடியும் என்பது விளங்கும். சர்வசன வாக்கெடுப்பில் முழுநாடும் ஒரு தேர்தல் தொகுதியாக இருப்பதால் அதில் அங்கீகாரம் பெறுவதற்குச் சிங்கள மக்களின் வாக்குகளும் தேவைப்படுகின்றன. நியாயமான அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற வளர்ச்சிப் போக்கே இன்று தென்னிலங்கையில் காணப்படுகின்றது. இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டியது அரசியல் தீர்வுக்குச் சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறுவதற்கு முக்கியமானது. இதற்கான அரசியல் நகர்வுகளில் கூட்டமைப்புத் தலைமை கவனம் செலுத்துவதாக இல்லை. சிங்களத் தலைவர்கள் சம்மதித்தால் மக்களின் அங்கீகாரத்தில் பிரச்சினை இருக்காது என்று இவர்கள் கருதுகின்றார்களோ தெரியவில்லை. இது பிழையான நம்பிக்கை. இனப்பிரச்சினை போன்ற முக்கியமான விடயங்களில் மக்கள் தங்கள் மனோநிலையின் படி தான் வாக்களிப்பார்கள். எனவே மக்களின் மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதைச் செய்யாமல் இனப்பிரச்சினை பற்றியும் அரசியல் தீர்வு பற்றியும் இலங்கையிலும் வெளி நாடுகளிலும் எவ்வளவு தான் பேசியும் பலனில்லை.

நியாயமான அரசியல் தீர்வுக்கு எதிரான மனோநிலை தென்னிலங்கையில் வளர்ந்ததற்குத் தமிழ்த் தலைவர்களும் இடதுசாரிக் கட்சிகளும் சம அளவில் பொறுப்பாளிகள். எனவே அரசியல் தீர்வுக்குச் சாதகமான மனோநிலையைச் சிங்கள மக்களிடம் தோற்றுவிக்க வேண்டிய கடப்பாடு இவ்விரு தரப்பினருக்கும் உண்டு.

காலத்துக்குக் காலம் தமிழ்த் தலைவர்கள் மேற்கொண்ட செயற் பாடுகள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக அவர்கள் பிரிவினையை நோக்கிச் செல்கின்றார்கள் என்ற சந்தேகம் சிங்கள மக்களிடம் ஆழ மாகப் பதிந்திருக்கின்றது. சந்திரிகாவின் தீர்வுத … தைக் கடைசி நேரத்தில் நிராகரித்துவப் புலிகளின் நிகழ்ச்சி நிரலை ஏற்றுச் செயற்பட்டமை இச் சந்தேகத்தை வலுப்படுத்தியது. இது பற்றி இப் … முந்திய வாரங்களில் விரிவா … றியிருக்கின்றது. சிங்கள மக்களிடம் தோன்றியுள்ள இச் சந்தேகம் அரசியல் தீர்வுக்கு அவர்களின் ஆதரவைப் பெறுவதைச் சிரமமாக்கியிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தைச் சிங்கள மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களின் சிந்தனையைச் சரியான பாதைக்குத் திருப்பியிருக்க வேண்டிய இடதுசாரிக் கட்சிகள் அந்தக் கடமையை நிறை வேற்றத் தவறியதால் பேரினவாதிகளின் பிரசாரம் எடுபடத் தொடங்கியது. இத் தலைவர்களின் சந்தர்ப்பவாதம் பேரின வாதிகளின் பிரசாரத்துக்கு இடம்விட்டு ஒதுங்குவதில் முடிந்தது. தென்னிலங்கை அரசியல் வழிச் சமூகத்தில் அரசியல் தீர்வுக்கு ஆதரவற்ற சூழ்நிலை உருவாகியதற்கு இதன் மூலம் இவர்களும் காரணமாகினர்.

அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தென்னிலங்கையில் தோற்றுவிக்கும் முயற்சியைத் தமிழ்த் தலைமையும் இடதுசாரிக் கட்சிகளும் பதின்மூன்றாவது திருத்தத்திலிருந்து ஆரம்பிக்கலாம். பதின்மூன்றாவது திருத்தத்தைத் தும்புத்தடியாலும் தொடமாட்டோம் என்பது போன்ற உயரப் பேச்சுகளை விட்டுவிட்டு மாகாண சபையைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்குத் தமிழ்த் தலை வர்கள் முன்வரவேண்டும். மாகாண சபையின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட விடயங்களில் தீர்மானங் கள் நிறைவேற்றுவதும் அறிக்கைகள் வெளியிடுவதும், மாகாண சபையைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளல்ல. மாகாண சபைக்குச் சட்டவாக்கல் அதிகாரம் உண்டு. இப்போது உள்ள விடயங்கள் தொடர்பாகச் சட்டங்களை ஆக்கி நடைமுறைப் படுத்திக் கொண்டு மேலதிக அதிகாரங்களுக்கான கோரிக்கையை வலியுறுத்தலாம். இந்த நடைமுறை சிங்கள மக்களின் சந்தேகங்கள் நீங்கி அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை தென்னிலங்கையில் தோன்றுவதற்குப் பெரிதும் உதவும்.

அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தென்னிலங்கையில் தோற்றுவிக்கும் பொறுப்பு பெருமள வில் இடதுசாரிக் கட்சிகளைச் சார்ந்தது. இடதுசாரித் தலைவர்களென அறியப்பட்டவர்கள் இந்தப் பணியின் முக்கியத்துவம் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாதவர்களாகவே இப் போது இருக்கின்றனர். இவர்கள் இந்த நிலையிலிருந்து விடுபட்டுப் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதையும் அரசியல் தீர்வின் அவசியத்தையும் வலியுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இக் கருத்து நிலையைக் கொண்டவர்களும் இடதுசாரி வழியில் சிந்திப்பவர்களுமான பலர் ஸ்தாபன மயப்படுத்தலின்றித் தென்னிலங்கையில் உள்ளனர். அவர்களை அணிதிரட்டி இப்பிரசாரத்தை முன்னெடுப்பதற்குத் தலைவர்கள் தயங்கினால் புதிய சக்தியொன்றின் தோற்றம் வரலாற்றுத் தேவையாகிவிடும்.

மேலே கூறியவாறு பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றுமுழுதாக ஆத ரிக்கும் நிலை உருவாகுவது தென்னிலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதன் முதலாவது படியாக அமையும். அதைத் தொடர்ந்து நடை முறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து ஆக்க பூர்வமான கருத்துப் பரிமாறலை மேற்கொள்ள முடியும்.

இந்த நடைமுறையைத் தவிர இனப்பிரச் சினையின் தீர்வுக்கு வேறு வழி இல்லை. இது காலம் எடுக்கும் ஆனினும் பலனளிக்கக்கூடியது. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது இதுவரை இருந்தது போல எப்போதும் கானல் நீராகவே இருக்கும். சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்காமல் தலைவர்களில் மாத்திரம் நம்பிக்கை வைப்பது எவ்வித பலனையும் தரப் போவதில்லை. தமிழ்த் தலைவர்கள் இந்த நடைமுறையைத் தவிர்த்து மக் களுக்கு உசுப்பேற்றும் அரசியலைத் தொடர்வார்களேயானால், அதன் விளைவு தலைவர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்குச் செல்ல மக்கள் தொடர்ந்து பிரச்சினைகளின் பாதிப்புக்கு உட்படுவதாகவே இருக்கும். மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

**சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்பது இதுவரை இருந்தது போல எப்போதும் கானல் நீராகவே இருக்கும். சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்காமல் தலைவர்களில் மாத்திரம் நம்பிக்கை வைப்பது எவ்வித பலனையும் தரப் போவதில்லை. தமிழ்த் தலைவர்கள் இந்த நடைமுறையைத் தவிர்த்து மக்களுக்கு உசுப்பேற்றும் அரசியலைத் தொடர்வார்களேயானால், அதன் விளைவு தலைவர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்குச் செல்ல மக்கள் தொடர்ந்து பிரச்சினைகளின் பாதிப்புக்கு உட்படுவதாகவே இருக்கும்.**

# 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள்



## மேதின நிகழ்வில் பிரதமர் தகவல்

(கொழும்பு)

நாட்டில் இளைஞர், யுவதிகளின் தொழில் பிரச்சினைக்கு தீர்வினைக்காண 10 இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பு கெம்பல்பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுபான்மை அரசாங்கத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு குறுங்கால நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதைப் போன்று நீண்டகால நிவாரணங்களைப் பெற வேண்டுமானால் அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியாக இருக்க வேண்டும்.

நாம் நாட்டின் சக்தியையும் ஐக்கிய தேசியக்கட்சியின் சக்தியையும் இன்று காட்டியுள்ளோம். 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெற்ற மேதினக் கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட கூட்டமாக இதனைப் பார்க்க வேண்டியுள்ளது. அந்தளவு மக்கள் இன்று வருகை தந்துள்ளமை எமது சக்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

நாம் இன்று அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்யாமல் பணத்தை செலுத்தியே பயன்படுத்துகிறோம். அவ்வாறே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சி களுக்கும் நாம் அரச வளங் களை பணம் வழங்கி பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

நாம் இன்று புதிய யுகத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஜனாதிபதியாகவும், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் பிரதமராகவும் இருக்கிறார். இதுவே புதிய பயணமாகும்.

அன்று எனக்கு எதிராக சூழ்ச்சிகளை செய்து வந்தார்கள். 2015 ஆம் ஆண்டில் நாம் ஆட்சியை கைப்பற்றுவோம் என்று தெரிவித்திருந்தேன். ஆனால், சிலர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் அதனை மாற்றியமைத்து காட்டினோம்.

ராஜபக்ஷ ஏகாதிபத்தியவாதத்தை தோற்கடித்துள்ளோம். இன்று சகலரும் மன தைரியத்துடன் இருக்கிறார்கள். இன்று பயமில்லாமல் வாழ்வதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட்டுள்ளது.

இறப்பர், நெல் ஆகியவற்றுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 12 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் தனியார் துறையின் சம்பளத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களாக உயர்த்தப்பட உள்ள தனியார் துறையின் சம்பளம் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 1500 ரூபா சம்பள அதிகரிப்பும் அடுத்தாண்டு ஜனவரி மாதம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பும் செய்யப்படவுள்ளது.

நாம் 100 நாட்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியது போன்று அடுத்த ஐந்தாண்டில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே இளைஞர், யுவதிகளின் தொழில் பிரச்சினைக்கு தீர்வினைக் காண வேண்டுமானால் 10 இலட்சம் தொழில்வாய்ப்பை உருவாக்க உள்ளோம்.

இந்த அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு பல கட்சிகள் எமக்கு உறுதுணை புரிந்தன. ஆனால், இதில் பெரும் பகுதியை ஐக்கிய தேசியக்கட்சியே ஏற்றுக் கொண்டது. ஆகவே, சிறுபான்மை அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றிய வாக்குறுதிகள் எதிர்கால சந்ததியினரை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டுமானால் அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மை அரசாங்கமாக இருக்கவேண்டும்.

ஆகவே, அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட அரசாக உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை உங்கள் முன்வைக்கிறேன் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் பாதுகாப்புக் குறித்து சோமவன்ச கவலைப்படத்தேவையில்லை

## பாதுகாப்பு அமைச்சர்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு குறித்து சோமவன்ச அமரசிங்க கவலைப்படத் தேவையில்லை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்புக் குறித்து பாதுகாப்பு அமைச்சே கவனம் செலுத்த வேண்டும். சோமவன்ச அமரசிங்க அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.

நாட்டில் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதியின் பாதுகாப்புக் குறித்து அதிக சிரத்தை எடுத்துக் கொள்வதற்காக சோமவன்ச அமரசிங்கவிற்கு நன்றி பாராட்டுகின்றேன்.

எனினும் அதற்காக உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லை, ஏதேனும் அச்சுறுத்தல்கள் இருந்தால் பாதுகாப்பு அமைச்சருக்கோ அல்லது பாதுகாப்புச் செயலாளருக்கோ அறிவிக்க வேண்டும்.

கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி அலரிமாளிகையில் இடம்பெற்ற சூழ்ச்சி தொடர்பில் விசாரணை களை மேற்கொள்ள வேண்டும் என்று கோரி சோமவன்ச அமரசிங்க நேற்றுமுன்தினம் சுதந்திர சதுக்கத்தில், உண்ணா விரதப் போராட்டம் மேற்கொண்டார். இது தொடர்பிலே ஜோன் அமரதுங்க இக்கருத்தை வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# 36 ஆயிரம் தமிழக படகுகள் அத்துமீறிப் பிரவேசம்

## கண்காணிப்பு ராடர் மூலம் தகவல்

நாள் தோறும் 36000 தமிழக மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறி பிரவேசிப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படை கண்காணிப்பு ராடரின் தகவல்களின் அடிப்படையில் இந்தப் புள்ளி விபரத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து இலங்கைக் கடற்படையினர் இந்திய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

வடக்கு தீவுகளில் அமைக்கப்பட்டுள்ள ராடர் கட்டமைப்புக்களின் மூலம் தமிழக மீனவர்களின் அத்து மீறல்கள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறிப் பிரவேசிக்கும் பல தமிழக படகுகள் சிங்கப்பூருக்கு மீன் விற்பனை செய்யும் நிறுவனத்திற்கு சொந்தமானது என அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# ஜோன்ஸ்டன், சஜின்வாஸ் அடுத்தவாரம் கைது

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸடன் பெர்னாண்டோவும், நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தனவும் அடுத்த வாரத்தில் கைது செய்யப்பட உள்ளதாக பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பாக ஜோன்ஸ்டனுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பணம் திருப்பிச் செலுத்தும் அடிப்படையின் கீழ் சதொச நிறுவனத்தில் ஐந்து மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டு முன்னாள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் இணைப்புச் செயலாளர் டீ.எம்.ஏ.சகீர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சஜின்வாஸ் குணவர்தன பொதுமக்கள் சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் அனைதது குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளதாகவும் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சகல இன மக்களையும் ஒன்றிணைத்து தேசிய சமாதானம் உருவாக்கப்படும்

## சுகாதார அமைச்சர் நம்பிக்கை



நாட்டில் வாழும் சகல இன மக்களையும் ஒன்றிணைத்து தேசிய சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது.

சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கும் போது, முன்னாள் தலைவர்கள் சிலர் அதனை சீர்குலைக்க முயற்சித்து வருகின்றனர் என சுகாதார் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். மே தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி சூழ்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டு வருவதாக முன்னாள் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர.

யார் என்ன சொன்னாலும் வடக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு இடையில் ஒற்றுமையை உருவாக்க முடிந்துள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட வடக்கு மக்களின் ஆயிரம் ஏக்கர் காணிகள் மீள வழங்கப்பட்டுள்ளன.

வடக்கில் உரிமைகளை கேட்கும் போது அவர்களை கொழும்பிற்கு அழைத்து வந்து இளமைக் காலம் முழுவதும் சிறையில் அடைக்கும் காலம் முடிவடைந்துள்ளது. வடக்கு மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் போது புலிகள் மீள தலைதூக்குவதாக பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

அந்தக் காலத்தில் புலித் தலைவர்களுடன் ஒன்றாக உண்டு குடித்து கும்மாளம் அடிததததனை மறந்து, இவ்வாறு முன்னாள் தலைவர்கள் குற்றம் சுமத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடாத்தவேண்டும்

## கோருகிறது ஜே.வி.பி



நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்துப் பொதுத் தேர்தலை நடாத்துமாறு ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிருளப்பனை பீ.ஆர்.சி மைதானத்தில் நடைபெற்ற ஜே.பி.யின் மே தின கூட்டத்தில் உரை யாற்றும் போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் எந்த அபிவிருத்திகளையும் மேற்கொள்ள முடியாது. அதுடன் கடந்த கால ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்கவும் முடியாது இதனால் இவ்வாறு தொடர்ந்தும் தற்போதைய நாடாளுமன்றத்தைக் கொண்டு செல்ல முடியாது.

மக்கள் ஆணையின்றியே பிரதமர் ஆசனத்தில் ரணில் அமர்ந்திருக்கின்றார். இதனால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கையெடுக்க வேண்டும்.

அவரை வெற்றிபெற செய்த மக்களின் கருத்துக்களுக்கு காது கொடுத்து நாடாளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

# கூட்டுறவுத்துறையினை மெருகேற்ற 100 நாள் திட்டத்தில் நடவடிக்கை

## வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் துறையினை மெருகேற்றுவதற்கு 100 நாள் வேலைத திட்டத்தினை எதிர்வரும் 15 ஆம திகதி ஆரம்பிக்கவுள்ளதாக வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

வடமாகாண கூட்டுறவாளர்களின் மேதினக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபையோ கூட்டுறவை எமது கட்சி சார்ந்தவர்களோ பரப்புரை வாகனமாக பயன்படுத்தமாட்டோம் என்று கூட்டுறவை பொறுப்பேற்றுக் கொண்டேன்.

பல்வேறு கட்சியை சார்ந்தவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், பேரணியிலும் கலந்து கொண்டிருப்பீர்கள். வடமாகாண சபை கூட்டுறவை எவ்வாறு புரிந்து கொண்டிருக்கின்ற தென்பதனை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நீங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது. வடமாகாண அமைச்சு நிச்சயமாக உங்கள் கோரிக்கைகளை செவிமடுக்கும்.

மத்திய அரசின் தலையீடு இல்லாமல் பெரும் துறையாக கூட்டுறவுத்துறை செயற்பட்டு வருகின்றது. கூட்டுறவுத் துறையினால் அதிகமானவற்றினை சாதிக்க முடியும்.

அனைத்து துறைகளைப் பார்க்கும் போது, அவற்றினைப் போன்று கூட்டுறவுத் துறையும் போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் போர் மட்டும் காரணம் இல்லை. போரை மட்டும் காரணமாக சொல்லிக் கொண்டிருப்போமானால், மீண்டும் மிடுக்கோடு கூட்டுறவு துறையினை மேம்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படும்.

எமது பக்கங்களிலும் பல வீனங்கள் இருக்கின்றன. தனியார் துறையின் போட்டி இப்போது அதிகரித்துள்ளது கூட்டுறவினை பண்டைய முறையிலும், பாரம்பரிய முறையிலும் பராமரித்து வருகின்றோம். திறந்த பொருளாதார கொள்கை தவிர்க்க முடியாது.

சர்வதேச போட்டிக்கு முகம் கொடுக்க கூடியவர்களாக எமது கூட்டுறவுத் துறையினை மாற்றி அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். கூட்டுறவுத் துறைக்கு புது இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். கூட்டுறவு துறையினை மேம்படுத்தக் கூடிய இளைஞர் சக்தி ஒன்றினை கூட்டுறவுக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு தொடர்பான தகவல்களை திரட்டியுள்ளோம். மேலதிகமான தகவல்களையும் கூட்டுறவுத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை தருமாறும், அந்த தகவல்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதிகாரிகள் தமக்கான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமல் இருக்கின்றார்கள். அதனால், கூட்டுறவுக்கான நியதிச் சட்டங்கள் உருவாக்குவேன் என உறுதியளித்தார்.

அந்த நியதிச் சட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும். பண்டைய முறைகளை கைவிட்டு, நவீனத்துவத்திற்குள் கூட்டுறவினை மெருகூட்ட வேண்டும்.

தொழிற்சங்க கட்டடம் அமைபபதற்கு ஒரு இடம் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சங்க கட்டடத்திற்கான இடம் ஒதுக்கி தரப்படுமென்றும் அவர் உறுதியளித்தார். (25)

# பராசக்தி அம்பாள் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன பூசை வழிபாடுகள்



(யாழ்ப்பாணம்)

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட காங்கேசன்துறை தெற்கு பளை நகரில் வீற்றிருக்கும் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஸ்ரீ பராசக்தி அம்பாள் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன பூசை வழிபாடுகள் 25 வருடங்களின் பின்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

ஆலயத்தின் அறங்காவலர் கோ.சி.பாலகுருநாதன் தலைமையில் நடைபெற்ற பூசை வழிபாட்டு நிகழ்வில் பராசக்தி அம்பாளுக்கு விசேட பூசைகள் இடம்பெற்று பாலஸ்தாபன அபிசேகம் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. பூசை வழிபாட்டில் சிவத்திரு குமாரசுவாமி ஐயா கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். 25 வருடங்களின் பிற்பாடு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்கள் இப்பூசை வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

இவ்வாலயத்தின் எழுந்தருளி விக்கிரகம், சிங்கம் குதிரை வாகனங்கள், ஆலயத்தின் பூசை வழிபாட்டுப்பொருட்கள், பிள்ளையார் விக்கிரகம், வைரவர் விக்கிரகம் என்பன மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட போது ஆலயத்தில் இல்லாது களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (63)

# விசர் நாய்க்கடிக்கு இலக்காகும் மட்டுவில் பகுதி மக்கள்

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியில் ஓரிரு தினங்களாகப் பலர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த மழையை அடுத்து சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல் கிராமங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மட்டுவில், நுணாவில் மேற்கு சந்திரபுரம், மடத்தடி போன்ற பகுதிகளில் பல நாய்கள் விசர் நோய்க்கு இலக்காகி பலரைக் கடித்துள்ளன.

இவ்வாறு கடித்த நாய்கள் சில விசர்நோய் முற்றிய நிலையில் இறந்ததையடுத்து இந் நாய்க்கடிக்கு இலக்கானவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை மடத்தடிப் பகுதியில் விசர்நோய்க்கு இலக்கான நாய்கள் வளர்ப்பு நாய்களுக்கு கடித்தமையால் அவற்றுக்கும் இந் நோய் பரவக் கூடும் என்ற அச்சத்தில் இப் பகுதி மக்கள் உள்ளனர். (இ)

# சமாதான நீதவானாக கந்தசாமி சத்தியப்பிரமானம்



(அச்சுவேலி)

அச்சுவேலி கதிரிப்பாயை வதிவிடமாகக் கொண்ட அப்புக்குட்டி கந்தசாமி, அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் திருமதி.கே. சிவபாதசுந்தரம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் உறுப்பினரும் கதிரிப்பாய் முரசொலி சனசமூகநிலையம், ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம் ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினரும் பிரபல சமூக சேவையாளருமாவார். (08)


# வெசாக் தோரணங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு யாழ்.முற்றவெளியில் படையினரால் வெசாக் தோரணம், அலங்கார வெசாக் [illegible] அமைக்கப்பட்டுவருகின்றது.

வெசாக்தினமான இன்று மாலை இவை மக்களின் பார்வைக்காக திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கென இராணுவத்தின் ஒவ்வொரு படைப்பிரிவிலிருந்தும் பாரிய வெசாக்கூடுகள் அமைக்கப்படுகின்றன. (இ)



## முரசின் இன்றைய பலன்

(03.05.2015 ஞாயிற்றுக்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 20 ஆம் திகதி.
சதுர்த்தி - திதி. சித்தம் - யோகம். சித்திரை நட்சத்திரம்.
முற்பகல் 09.04 வரை. பின் சுவாதி.
இராகுகாலம் 04.26-05.56 வரை சுபநேரம் 08.56-10.26 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: விபத்து ஏற்படாமல் இருக்க அவதானமாக செயற்படல்.

**ரிஷபம்**: உதவமனம் விரும்பினும் நம்பகம அற்றுப்போனதால் பின்னடித்தல்.

**மிதுனம்**: நட்புவட்டாரங்கள் விரிவடைந்து பிறர்மெச்சும் நிலை ஏற்படல்.

**கடகம்**: சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இன்மையால் வியாபாரம் தொய்வு நிலை அடைதல்.

**சிம்மம்**: தற்காலிகப் பணியைக் கைவிட்டு வெளியூர் செல்லும் முயற்சியில் இறங்குதல்.

**கன்னி**: பெற்றோரின் இடைவிடாத நச்சரிப்பினால் விவாகம் செய்ய இசைதல்.

**துலாம்**: பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நிலைபற்றி எச்சரிக்கையாக இருங்கள்.

**விருச்சிகம்**: எவரையும் முதன்மைப்படுத்திக் கொள்ளாது சமமாக நடாத்த முற்படுங்கள்.

**தனுசு**: எய்தவன் இருக்க அம்பை நோகும நிலையில் இருந்து துன்பப்படல்.

**மகரம்**: உங்களின் அணுகு முறையினால் பகைவரும் நண்பராகிவிடல்.

**கும்பம்**: கானாக்கழியினால் இரவில் பாதிப்படையும் நிலை இருக்கும்.

**மீனம்**: அலுவலக வேலைகள் தொர்பாக திடீர் பயணம் ஏற்பட்டு விடலாம்.




பாடசாலை மட்ட கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 15 வயதுப் பிரிவில் முதலாமிடத்தையும் 19 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. (93)

### கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில்

# அச்சுவேலி தோப்பு வாலிபர் நியுவொறியன்ஸ் வெற்றி




சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடாத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அச்சுவேலி தோப்பு வாலிபர், மல்லாகம் நியுவொறியன்ஸ் அணிகள் வெற்றி பெற்றுள்ளன. அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணியும் அச்சுவேலி தோப்பு வாலிபர் கழக அணியும் மோதிய இரு சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதல் சுற்றில் அச்சுவேலி தோப்பு வாலிபர் கழக அணி 25-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரு அணிகளும் வெற்றிபெற வேண்டும் என்ற இலக்குடன் இரண்டாம் சுற்றுக்கு களமிறங்கின. விறுவிறுப்புடன் நடைபெற்ற போட்டியின் இரண்டாம் சுற்றிலும் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணியால் வெற்றி பெற முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2ஆம் சுற்றிலும் வெற்றிபெற்றது.

இரண்டு சுற்றுக்களிலும் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

மற்றுமொரு போட்டியில் நீர்வேலி ஐக்கியம் விளையாட்டுக்கழக அணியும் மல்லாகம் நியுவொறியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின. இரு அணிகளும் மோதிய இரண்டு சுற்றுப் போட்டி நடைபெற்றன. இதில் முதல் சுற்றில் மல்லாகம் நியுவொறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாம் சுற்று மிக விறுவிறுப்புடன் ஆரம்பமானது. இரு அணிகளும் வெற்றிபெற வேண்டும் என்ற இலக்குடன் போராடின. ஆட்ட நேர முடிவில் மல்லாகம் நியுவொறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரு சுற்றிலும் நியுவொறியன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

மேற்படி போட்டிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (93)

## கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்படும் பி பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 25 கரப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளன. இந்நிகழ்வுக்கு கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ரி. மனோகரன் கலந்துகொள்ளவுள்ளனர்.

பங்குபெறும் அணிகளை உரிய நேரத்துக்கு வருகை தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (93)

## கரப்பந்தாட்ட கலந்துரையாடல்

வடக்கு-மலையக கரப்பந்தாட்ட ஒன்றியத்தினால் கரப்பந்தாட்டத் திறனை முன்னேற்றும் முகமாக நடைபெறவுள்ள கரப்பந்தாட்டம் சம்பந்தமான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் தொண்டைமான் விளையாட்டு நிலையத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பங்குபெறும் வடக்கைச் சேர்ந்தவர்கள் நேற்று ஹற்றனுக்குச் சென்றுள்ளனர். கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் 17, 19 வயதுப் பிரிவினரிடையே நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (93)

## காலபந்தாட்டப் போட்டியில் யங்ஹென்றீஸ், டைமண்ட் வெற்றி

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடாத்தி வரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யங்ஹென்றீஸ் மற்றும் டைமன்ட் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என மோதிக் கொண்டன. இரு அணிகளுமே கோல்களைப் போட முயற்சித்த வண்ணமிருந்தன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆட்ட நேர முடிவில் 3.2 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

மற்றுமொரு போட்டியில் பருத்தித்துறை டைமன்ட் விளையாட்டுக்கழக அணியும் பருத்தித்துறை நியூட்டன் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை டைமன்ட் அணி ஓட்ட நேர முடிவில் 3.2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மேற்படி போட்டிகள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## வடமராட்சி வலய மெய்வல்லுநர் போட்டிகள்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் மற்றும் 6,7ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் பங்குபெறும் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கான் அழைப்புகள் பாடசாலை அதிபர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபெறும் மாணவர்களை உரிய நேரத்துக்கு போட்டி நடைபெறும் இடத்துக்கு வருகை தந்து நேர விரயத்தை தவிர்த்துப் போட்டிகள் ஒழுங்கு முறையில் இடம்பெற வழிவகை செய்யுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (93)

## அல் அஸ்ஹார் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். அராலி வீதியிலுள்ள அல் அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி உள் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், கௌரவ விருந்தினராக கே.எம். நிலாம் (றியாஸ்) மற்றும் பள்ளிவாசல் தலைவர்களும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எப். ஷாரா, எப். ஷாஹிப் ஆகிய மாணவர்களின் கிராத்துடன் ஆரம்பமாகி எம். ஆர். நவ்சரத் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சிறார்களின் விளையாட்டுப் போட்டியும் இசையும் அசைவும் வினோத உடைப் போட்டியும் பழைய மாணவர்கள், பெற்றோர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் இடம்பெற்று பரிசுகளும் பிரதம அதிதியினால் வழங்கப்படவுள்ளன. (105)

## மன்னாரில் 20:20 கிரிக்கெட் போட்டி

மன்னார் வடக்கு விளையாட்டு சம்மேளனத்தினால் 20-20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 8,9ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ளடங்கும் மாவட்டங்களில் . மன்னார் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து ஒரு அணியும் மன்னார் மாவட்டத்திலிருந்து இரு அணிகளும் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன. மேற்படி போட்டிகள் மன்னார் நகர சபை மைதானத்தில் 8ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. போட்டியில் பங்குபெறும் அணிகளை உரிய நேரத்துக்கு வருகை தந்துநேர விரயத்தை தவிர்க்குமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (93)

## - ஐ.சி.சி.தரவரிசையில் முதலிடம் -

# ஒருநாள் போட்டி - அவுஸ்ரேலியா ரி - 20 போட்டி - இலங்கை



அவுஸ்ரேலிய அணி



இலங்கை அணி

ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளின் முடிவில் அடிப்படையில் அணிகளின் தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

**ஒருநாள் போட்டி தரவரிசை:-**

1. உலக சம்பியன் அவுஸ்ரேலியா (129 புள்ளிகள்),
2. இந்தியா (117 புள்ளிகள்),
3. நியூசிலாந்து (116 புள்ளிகள்),
4. தென்னாபிரிக்கா (112 புள்ளிகள்),
5. இலங்கை அணி (106 புள்ளிகள்),
6. இங்கிலாந்து அணி (94 புள்ளிகள்),
7. மேற்கிந்திய தீவுகள் (88 புள்ளிகள்),
8. பங்களாதேஷ் (88 புள்ளிகள்),
9. பாகிஸ்தான் (87 புள்ளிகள்),
10. அயர்லாந்து (50 புள்ளிகள்)

**ரி20 போட்டி தரவரிசை:-**

1. உலக சம்பியன் இலங்கை (135 புள்ளிகள்),
2. இந்தியா (124 புள்ளிகள்),
3. அவுஸ்ரேலியா (122 புள்ளிகள்)

## இன்றைய ஆட்டம்




**பஞ்சாப் எதிர் மும்பை**
**இடம்: மொகாலி**
**நேரம்: மாலை 4.00 மணி**

**இராஜஸ்தான் எதிர் டில்லி**
**இடம்: மும்பை**
**நேரம்: இரவு 8.00 மணி**

## இரசிகர்கள் அதிகம் விரும்பும் அப்டிரி

ஐ.பி.எல்.தொடரில் எந்த வீரர்கள் இல்லாதது இரசிகர்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் விதமாக இருக்கிறது என்று ஒரு கருத்து கணிப்பு நடாத்தப்பட்டது. இதில் பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரர் சாகித் அப்ரிடி 27.20 சதவீத வாக்குகளை பெற்று முதலிடத்தை பிடித்தார்.

இந்தியாவில் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தடையால், சர்கித் அப்ரிடி உள்ளிட்ட பாகிஸ்தான் வீரர்களால் ஐ.பி.எல்.தொடரில் பங்கேற்க முடியவில்லை. இவருக்கு அடுத்த இடத்தில் குமார் சங்கக்காரவுக்கு 16.62 சதவீத வாக்குகளும், தென்னாபிரிக்க வீரர் ஹாசிம் ஆம்லாவுக்கு 11.03 வாக்குகளும் கிடைத்துள்ளன.

மேலும் முதல் பத்து இடங்களில் சாகிப் அல் ஹசன், பிரெண்டன் டெயிலர், ராஸ் டெயிலர் ஆகியோரும் இடம் பிடித்துள்ளனர். தனது அதிரடியால் இரசிகர்களை கவர்ந்த அப்ரிடி, கடந்த 2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல்.தொடர் உருவாக்கப்பட்ட போது, டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## காதலில் கலக்கும் அவுஸ்ரேலிய வீரர்கள்





அவுஸ்ரேலிய வீரர்கள் களத்தில் மட்டுமல்ல காதல் விளையாட்டிலும் கலக்கலாகவே செயற்படுகின்றனர்.

மைதானத்தில் ஆக்ரோஷமாக செயற்படும் இவர்கள் வீட்டிற்குச் சென்றால் தலை கீழாக மாறிவிடுகின்றனர். தற்போது ஐ.பி.எல்.போட்டியிலும் இவர்களின் ஆட்டத்தில் அனல் பறக்கிறது.

**ஷேன் வட்சன்**

ராஜஸ்தான் அணியை வழிநடாத்தி வரும் வட்சன் மொடல் அழகியான லீ புர்லாங்கை மணந்துள்ளார். இவர் திருமணத்திற்கு முன் 'பாக்ஸ் ஸ்போர்ட்ஸ்' செய்தி நிறுவனத்தில் தொகுப்பாளராக இருந்தார். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.

**மிட்சல் ஜோன்சன்**

பஞ்சாப் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன், ஜெசிகாவை திருமணம் செய்துள்ளார். முன்னாள் மொடல் அழகியான ஜெசிகா, கராத்தேவில் 'பிளாக் பெல்ட்' வாங்கியவர்.

சில சமயங்களில் ஜோன்சன் பங்கேற்கும் போட்டிகளில் மைதானத்தில் தென்படுவார். இவர்களுக்கு ருபிகா என்ற மகள் உள்ளார்.

**ஸ்டீவ் ஸ்மித்**

ராஜஸ்தான் அணியின் சகலதுறை வீரரான ஸ்டீவ் ஸ்மித், தனது நாட்டை சேர்ந்த டேனி வில்சுடனை காதலித்து வருகிறார்.

இவர் சட்டம் மற்றும் வணிகவியல் படிப்பு படித்து வருகிறார்.

இவரை ஸ்மித் வலைப்பயிற்சியின் போது எப்போதாவது பார்க்கலாம்.

**மிட்சல் ஸ்டார்க்**

உலகக்கிண்ணத் தொடரில் தொடர் ஆட்டநாயகன் விருது வென்ற மிட்சல் ஸ்டார்க், ஐ.பி.எல்.தொடரில் பெங்களூர் அணியில் விளையாடி வருகிறார்.

இவர், அவுஸ்ரேலிய பெண்கள் அணியின் விக்கெட் கீப்பர் அலிசா ஹிலியை காதலித்து வருகிறார். இவர்கள் ஒன்பது வயதிலிருந்தே நெருங்கிய நண்பர்கள். பின் காதலர்களாக மாறினர்.

ஸ்டார்க் போட்டியில்லாமல் வீட்டில் ஸ்டார்க் இருக்கும்போது, தனது கையால் சமைத்து அலிசாவுக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பாராம்.

## 3,500 ஓட்டங்கள் கடந்து ரெய்னா சாதனை



செ[illegible] சூப்பர் கிங்ஸ் அணியின் அதிரடி ஆட்டக்காரர் சுரேஷ் ரெய்னா, ஐபிஎல் போட்டிகளில் 3,500 ஓட்டங்கள் என்ற புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

கொல்கத்தா அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் அவர் 2 ஓட்டங்கள் எடுத்த போது இந்த சாதனையை படைத்தார்.

மேலும் இந்த இலக்கை எட்டும் முதல் வீரர் ரெய்னா மட்டுமே. இவர் இதுவரை 123 போட்டிகளில் 3,506 ஓட்டங்கள் (1 சதம், 24 அரைசதம்) எடுத்துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் மும்பை அணித்தலைவர் ரோஹித் சர்மா 3,147 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

அதே போல் நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா அணித்தலைவர் கவுதம் கம்பீர், 3000 ஓட்டங்களை எட்டினார். இதுவரை 111 போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 3,015 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

## கிரிக்கெட்டில் எனது கதை முடியவில்லை



கிரிக்கெட்டில் எனது கதை முடியவில்லை காயத்தில் இருந்து குணமடைந்து மீண்டும் கிரிக்கெட் விளையாடியது மகிழ்ச்சி அளிக்கிறது என்று டில்லி அணியின் வேகப்பந்து வீச்சாளர் சகீர்கான் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் சகீர்கான், காயம் காரணமாக சில வருடங்களாக அணியில் இருந்து ஒதுங்கி இருந்தார்.


இந்நிலையில் ஐ.பி.எல்.தொடரில் அவரை டில்லி அணி வாங்கியது. இருப்பினும் காயத்தில் இருந்து குணமடையாத சகீர்கான் களமிறங்கவில்லை. இதைத் தொடர்ந்து நீண்ட இடைவெளிக்குப் பிறகு பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் களமிறங்கினார். சிறப்பாக பந்துவீசி 2 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார்.

இது குறித்து சகீர்கான் கூறுகையில், எங்களது வியூகங்களை களத்தில் சிறப்பாக செயற்படுத்தி, பஞ்சாப்பை கட்டுப்படுத்தினோம். தொடக்கத்தில் கொஞ்சம் பதற்றமாக இருந்தது. ஆனால் போகப் போக இயல்பான நிலைக்கு வந்து நன்றாக செயற்பட்டேன்.

கிரிக்கெட்டில் எனது கதை முடிந்து விட்டதாக எழுதினார்கள். எனது கிரிக்கெட் வாழ்க்கை ஒருநாள் நிறைவடையும். அப்போது அதை நானே சொல்வேன் என்று கூறியுள்ளார்.

# ஜே.வி.பி-யின் ஏப்ரல் கிளர்ச்சியின் 44 ஆண்டு நிறைவில் சில நினைவுகள்

2 - முருகபூபதி -



விஜேவீர சிறையிலிருந்து விடுதலையானதும் மேடைகள் தோறும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை கடுமையாகவே விமர்சித்தார்.

தோழர் சண்முகதாசனின் கம்யூனிஸ்ட் (பீக்கிங்) கட்சியிலும் அவர் முன்பு இணைந்திருந்தார். இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற கருத்தியலை அவர் அந்தப் பாசறையில்தான் கற்றார். இலங்கைக்கு இந்திய அமைதிப் படை வந்தபொழுது அந்த வாதத்தையே அவர் வலியுறுத்தி கிளர்ச்சியும் செய்தார்.

பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியை இலங்கையில் பிளவு படுத்துவதற்காகத்தான் சோவியத்தின் உளவுப்பிரிவான கே.ஜி.பி. விஜேவீரவை பயிற்றுவித்து இலங்கைக்கு திருப்பி அனுப்பியது என்பது எனக்கு அறிமுகமான தோழர் சண்முகதாசனின் வாதம்.

தங்கள் ஊர் தம்பி தமது ஊர் திரும்பியதும் ஆஸ்பத்திரியில் பணியாற்றப்போகிறார் என்பது எனக்கு அறிமுகமில்லாத அந்த ஊரின் சலூன்காரரின் எதிர்பார்ப்பு.

1971 இல் விஜேவீரா கைதான பொழுது சண்முகதாசனும் கைதுசெய்யப்பட்டார்.

1974 இல் தொடங்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்ற பேரியக்கத்தில் நானும் இணைந்தவேளையில் அதற்கான பிரசுரத்தில் தோழர் சண்முகதாசன், குமாரி ஜெயவர்த்தனா, பாலாதம்பு, பிரின்ஸ் குணசேகரா, எச்.என்.பெர்ணான்டோ, லீனஸ் திசாநாயக்கா, வாசுதேவ நாணயக்கார, கார்லோஸ் பொன்சேக்கா ஆகியோரின் கையொப்பங்களுடன் எனது கையொப்பமும் இருந்தது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரும் விரிவான பத்திரத்தில் நீர்கொழும்பில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கும் இயக்கம் முழுநாளும் நடந்த தினத்தன்று மாலையில் பஸ்நிலையத்திற்கு அருகிலிருந்த மைதானத்தில் பகிரங்கக் கூட்டமும் நடத்தினோம்.

தோழர்கள் சண்முகதாசன், வாசுதேவ நாணயக்காரா ஆகியோரும் வந்து பேசினார்கள்.

1977 இல் பொதுத்தேர்தல் நடக்கும் முன்னர் ஸ்ரீமாவின் தலைமையில் இயங்கிய கூட்டு முன்னணி அரசிலிருந்து அடுத்தடுத்து என்.எம்.பெரேராவின் சமசமாஜக் கட்சியும் விக்கிரமசிங்காவின் கம்யூனிஸ்ட் கட்சியும் வெளியேறி இரண்டும் இணைந்து இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைத்தன.

அவ்வேளையில் அதன் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் இணைந்திருந்தேன்.

ஆனால் - அந்த இரண்டு பெரிய இடதுசாரிக் கட்சிகளும் மீண்டும் ஸ்ரீமாவின் கட்சியுடன் தேன்நிலவுக்கு தயாரானதும் வெறுப்புற்று மாலை வேளைகளில் கடற்கரையில் பொழுதை செலவிட்டேன். வானத்தைப் பார்த்தேன். சூரியன் மங்கி மறையும் காட்சியை தினமும் பார்த்தேன். இரவில் தோன்றும் நட்சத்திரங்களை எண்ணத் தொடங்கினேன்.

அந்த அரசியல்வாதிகளினதும் இயல்புகள் மாறவில்லை.

எனினும் கம்யூனிஸ்ட் கட்சி சார்ந்த எழுத்தாளர்களுடன் உறவு ஆரோக்கியமாகவே தொடர்ந்தது.

1977 இல் ஜே.ஆர். ஆட்சியில் விடுதலையாகிய தோழர் விஜேவீர மீண்டும் மருத்துவக்கல்வியை தொடரவில்லை. பொறியியல் பட்டதாரியான தோழர் லயனல் போப்பகே ஒரு பொறியியல் தொழில் தேடிச் செல்லவில்லை. மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியை கட்டி எழுப்பினார்கள்.

அவர்களின் இயல்புகளும் மாறவில்லை. நாடெங்கும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தினார்கள். கிளைகள் அமைத்தார்கள். கட்சித் தோழர்கள் நாடெங்கும் சுவர்களில் பெரிய பெரிய சுவரொட்டிகளின் மூலம் கட்சியை பிரசாரப்படுத்தியவாறு ஸ்ரீமாவின் கட்சியையும் ஜே.ஆரின். கட்சியையும் கடுமையாக விமர்சித்தார்கள். சுவாரஸ்யமான கேலிச்சித்திரங்கள் வரைந்தார்கள்.

எங்கள் ஊருக்கும் விஜேவீர வந்து பேசினார். அவரையும் அவரது தோழர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்று எந்த மைதானத்திலிருந்து குரல் கொடுத்தோமோ அதே மைதானத்தில் அவர் தோன்றி கர்ஜனை புரிந்தார்.

பஸ்நிலையத்திற்கு உடன் சென்றோம். சிறையிலிருந்து வந்தவரைப் பார்க்க திரண்ட மக்கள் பஸ்நிலையம் வரையில் பின்னால் அணிதிரண்டனர்.

பொலிஸார் அவருக்கு பாதுகாப்பு வழங்க முன்வந்தார்கள். "மக்களே என்னை விடுதலை செய்தார்கள். மக்களே பாதுகாப்பு தருவார்கள்" என்றார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்.

நீதியரசர் அலஸ் தலைமையிலான ஆணைக்குழுவின் முன்னால் கைதியாகத் தோன்றிய விஜேவீர, பேசும்பொழுது, தம்மை சித்திரவதை செய்த சிங்கள பொலிஸாரை (பல்லோ) நாய்கள் என்றே சொன்னார். ஆனால், யாழ்ப்பாணம் சிறையில் இருந்தபொழுது தன்னை நல்லவிதமாக கவனித்துக்கொண்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுந்தரலிங்கத்தை புகழ்ந்து போற்றினார்.

(தொடரும்)

# மாமாங்கத் திருவிழா சூழலில் மாற்றத்திற்கான செயற்பாடு

இன்றைய காலகட்டத்தில் கோயில்கள் அனைத்தும் நவநாகரீகத் தன்மை மிக்கதாகவும் பொருளாதார ரீதியில் உயரிய வருமானங்களைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களாகவும் மாறியுள்ளதோடு வருமானத்தினைக் கொண்டு எவ்வாறு செலவு செய்வது எனத் தெரியாமல் ஆடம்பரமான செயற்பாடுகளுக்கு அதனை பயன்படுத்தும் வகையில் உள்ளன.

கோயில்சார் நிர்வாகக் குழுக்களுக்கு இடையேயான சுரண்டலும் அதன் காரணமான மனக்கசப்புக்களும் போட்டி மனப்பாங்குகளும் மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

பழமை வாய்ந்த ஆடம்பர, அலங்காரங்கள் இல்லாத எளிமையான கோயில்களில் காணப்படும் மனச்சந்தோ'ம் மேற்குறித்த வகைக்கு உட்பட்ட கோயில்களில் கிடைப்பதில்லை.

மணல் நிரம்பிய களி அல்லது சீமெந்து தரைகள், ஓட்டின் மூலமான கூரையமைப்புக்கள் அல்லது ஓலைக் கூரையமைப்புக்கள் உள்ள கோயில்கள் சுத்தமான சுவாத்தியத்தையே மக்களுக்கு அளிக்கும். இதுவே மன அமைதிக்கும் மன ஆசுவாசத்திற்கும் உகந்ததாக அமைகின்றது.

மேலும், சில வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்டமைந்த கோயில்கள் தற்போது உ்லக மயமாக்கற் பின்னணியில் வரலாறுகளை இழந்துவரும் நிலைமையும் காணப்படுகின்றது. தொன்று தொட்டு வந்த கதைகள் அல்லது தனித்துவங்களை இருட்டடிப்புச் செய்யும் முறையில் நவீனம் என்ற பெயரில் இவ்வாறான வரலாற்றுத் தன்மைகளை தகர்த்து எறிந்து உயரிய கட்டடங்களாகவும் பிரமாண்ட அலங்கரிப்புக் கொண்ட வடிவமைப்புக்களாகவும் மாற்றி வரலாற்றினையே ஒட்டுமொத்தமாக சிதைத்து விடுகின்றனர்.

ஆயினும் கோயில்களில் மாற்றப்பட வேண்டிய் நவீன கருத்தியல் நிலைக்கு உட்பட்ட விடயங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருப்பதும் வருந்தத்தக்கது. அந்த வகையில் சாதியம் பற்றிய கட்டுப்பாடுகள் மட்டும் தொடர்ந்து தொன்று தொட்டு பழமையான முறையில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது.

சாதி, குலம், குடி பற்றின மதிப்பீடுகளும் தலைமைத்துவம் வகித்தல், நிர்வாக அமைப்புமுறைச் செயற்பாடுகளில் பால்நிலைச் சமத்துவம் இன்மை (அனைத்துக் கோயில்களிலும் ஆண்கள் மட்டுமே தலைமைத்துவ அதிகாரத்தினைத் தக்க வைத்துக்கொள்ள முற்படல்) போன்றவைகள் கருத்தில் எடுக்கப்படாமலும் அவை பாரம்பரியமாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற ஓர்மவெறி நீடித்து தங்களுக்கு சாதகமாக வைத்துக்கொண்டு இருக்கும் நிலைப்பாடுகள் அபத்தமானது.

மாமாங்கத் திருவிழாச் சூழலில் கடந்த நான்கு வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் பாரம்பரிய அரங்க ஆற்றுகைகளும் காட்சிக்கூடமும் எனும் தொனிப்பொருளில் பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் வகையிலான காட்சிப்படுத்தல்கள் பாரம்பரியக் கலைகளின் ஆற்றுகை நிகழ்ச்சிகள் போன்றன இடம்பெற்று வருகின்றமை கவனத்திற்குரியவை.

காட்சிப்படுத்தல்களின் போது கூத்துக்கள் சார் ஆடை, ஆபரணங்கள் கூத்துப் பிரதிகள் போன்றவையும் சடங்கு சார் பொருட்கள் சடங்கில் பயன்படுத்தப்படும் இசை வாத்தியங்கள் போன்றவையும் எமது தமிழர் பண்பாட்டுச் சூழலில் காணப்படும் அருந்தலான பண்பாட்டு அடையாளங்களை பிரதிபலிக்கும் பண்பாட்டு பயன்பாட்டுப் பொருட்கள் போன்றவைகளும் காட்சிப்படுத்தப்படுவது நிகழ்ந்து வருகிறது.

வடமோடி, தென்மோடி, வசந்தன், பறைமேளக் கூத்து, வேடர் சமுதாயச் சடங்குகள், புலிக்கூத்து, தப்பு ஆட்டம், சிறுவர் கூத்தரங்குகள், மீளுருவாக்க கூத்துக்கள் போன்றனவும் இடம்பெறுவதோடு கலைஞர்களை கௌரவித்தல், அண்ணாவிமார்களை கௌரவம் செய்தல் போன்ற நிகழ்வுகளும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் அரங்க ஆற்றுகைகள் பாரம்பரிய கூத்துக்கள் அளிக்கை செய்யப்பட்டு வருகின்றன.

மாமாங்கத் திருவிழாவின் போது "பட்டு எடுத்து வரும் நிகழ்வு" இடம் பெறுவது வழமை. இந் நிகழ்வு கடந்த வருடங்களில் நாதஸ்வரம், தவில், மேளம் போன்ற தாள வாத்தியங்களுடனும் வட்ட வர்ண குடைபிடித்தும் சம்பிரதாயமான முறையில் எடுத்து வரப்பட்டு திருவிழா இடம் பெறுவது, மூலநாயகர் சுவாமி வீதி உலா இடம் பெறுவது ஆகியன வழமையான செயற்பாடுகள்தான்.

ஆனால் 2014ஆம் ஆண்டு இடம் பெற்ற திருவிழாவின் போது ஆக்கபூர்வமான மாற்றம் நிகழ்ந்தமை வரவேற்கத் தக்கதும் பெருமை கொள்ளத் தக்கதும் சுய சிந்தனைப்போக்கை தூண்டக்கூடியதுமான விடயமாகும்.



பத்திரத்தில் நீர்கொழும்பில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கும் இயக்கம் முழுநாளும்

... பான தோழர் லயனல் போப்பகே ஒரு பொறியியல் தொழில் தேடிச் செல்லவில்லை. மீண்டும் மக்கள்

... பொலிஸ் மா அதிபர் சந்தரலிங்... புகழ்ந்து போற்றினார்.

(தொடரும்)

# 19ஆவது திருத்தம் வெற்றியும் தோல்வியும்

- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.

நீண்ட இழுபறிகளுக்குப் பின். 174 திருத்தங்களுடன் 19ஆவது திருத்தச் சட்டம் செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 28. 2015) நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் அரசியலமைப்புத் திருத்தமொன்று 211 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் கொள்ள முடியும்.

மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்வில் கடந்த ஜனவரி மாதம் 08ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதி தேர்தல் வெற்றி, அவர் என்றைக்குமே எதிர்பார்க்காத ஒன்று. ஆனால், அந்த வெற்றியைத் தாண்டி தன்னுடைய பெயரை வரலாற்றில் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதனூடு செய்திருக்கின்றார்.

ஜனாதிபதி பதவியை அடைவதற்கு ரணசிங்க பிரேமதாஸ. சந்திரிகா குமாரதுங்க. மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட பிரயத்தனங்களில் குறைந்தளவைக் கூட மைத்திரிபால சிறிசேன செய்திருக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஒப்புக்கொண்டது மட்டுமே அவர் மேற்கொண்ட கத்தி முனைத் தீர்மானம். மற்றப்படி, அவருக்கான வெற்றியை பொது எதிரணியும் வெளிநாடுகளும் ஊடகங்களும் இணைந்து பெற்றுக் கொடுத்தன.

எனினும். தனக்குக் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வாய்த்தது. அவர் அதனைச் செய்யாமல். ஜனநாயக விழுமியங்கள் மீது தான் கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனை மக்கள் ஜனநாயகத்தின் குறிப்பிட்டளவான வெற்றியாகக் கொள்ள முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம், 1978ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு அமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. சுமார் 37 வருடங்களாக அந்த முறையின் கீழே இலங்கை ஆளப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனங்களில் தலையீடு செய்யுமளவுக்கான தனிநபர் ஆளுகையை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை வழங்கியிருந்தது.

என்றைக்குமே இலங்கை அரசியலில் தன்னை (ஐ.தே.க.வை) தோற்கடிக்க முடியாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த அரசியலமைப்புத் திருத்தம், அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவை இரண்டு தசாப்தங்களாக அலைக்கழித்திருக்கின்றது. அதுதான், ஐக்கிய தேசியக் கட்சி, 19ஆவது திருத்தச் சட்டத்தினை உறுதியாக முன்மொழிய வைத்தமைக்கான காரணம். மாறாக, ஜனநாயகத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சி பாரிய அக்கறை கொண்டிருக்கின்றது என்று நம்புவதற்கான சூழல் இன்னமும் அமையவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகள் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதியளித்து அதனைக் காற்றில் பறக்க விட்டிருக்கின்றார்கள். அந்த வகையில். மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்ரமசிங்க கூட்டினால் வாக்குறுதியை பகுதியளவேனும் நிறைவேற்ற முடிந்திருக்கின்றது என்பதை மக்களிடம் வெற்றிக்கான காரணமாக முன்வைக்க முடியும். அதுபோக. வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற முடியாமைக்கான காரணமாக. மகிந்த பூச்சாண்டியையும் கடந்த அரசாங்கத்தின் ஊழல்வாதிகளையும் இலகுவாக கைநீட்டவும் முடியும்.

இன்னொரு பக்கம். தாம் எதிர்பார்த்த திருத்தங்களுடன் 19ஆவது திருத்தச் சட்டம் அமையவில்லை என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி ஆழ்ந்த அதிருப்தியுடன் இருக்கின்றது. எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பெருமளவான (111) மாற்றங்களைச் செய்த பின்னரே நிறைவேற்ற முடிந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியிடம் இருந்து அதிகாரங்களை பெற்றுக் கொள்வதில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்வதற்கு தயாராகவில்லை. மாறாக, பிரதமரிடம் (ரணிலிடம்) அதிகாரங்களைக் குவிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதிலேயே குறியாக இருக்கின்றது.

கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான காலத்தைக் கணித்து ரணில் விக்கிரமசிங்க காய்நகர்த்துகின்றார். அதுதான், ஐ.ம.சு.கூட்டமைப்புக்குள் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அதனூடு மக்களிடம் நேரடியாக தேர்தலுக்குச் செல்ல முடியும். அப்படியான சூழ்நிலைகளை உருவாக்குவதே, ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதைக்கு பாதிப்பை வழங்கும் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி.

பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைந்தாலும் அது, ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகவே செயற்படும் என்பது வெளிப்படையானது. அதனை, எப்படித் தகர்ப்பது என்றே சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது யோசிக்கின்றார்கள். ஆனால், அதற்கான வழிகள் அவ்வளவு இலகுவாக திறந்துவிடாது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்க அனைத்துப் பக்கத்திலும் பொறிகளை வைத்திருக்கின்றார்.

19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தினமே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கின்றது என்று யாரும் நம்ப வேண்டியதில்லை. அது உண்மையும் இல்லை.

19ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றம் ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்கால அரசியல் இருத்தலை தீர்மானிப்பதற்கான கருவியாகவே கொள்ள முடியும். அதனை, அவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒத்தாசையோடு வெற்றி கொண்டிருக்கின்றார்.



---

2014ஆம் ஆண்டு நிகழ்வின் போது நாதஸ்வரம், தவில், மேளம் போன்ற தாள வாத்தியங்களுடன் இணைந்து புறாவாத்து கண் நிகழ்வுகளுக்குச் சென்ற பாரிய கலைஞர்களும் பண்பாட்டு முக்கியத்துவம் மிக்க மக்களும், சல்லாரி, உடுக்கை, சவணிக்கை, பறை, தப்பு, கொம்பு, நாபன், பிரம்மதாளம், போன்ற தாள ஓசை ஒலிகளை ஒலிக்கச் செய்து பட்டு எடுத்து வரும் நிகழ்வு இடம்பெற்றது.

இங்கு முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டிய விடயம் என்னவெனில் முன்றாவது கண் நனவிர்களும், பாரம்பரியக் கலைஞர்களும், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையில் விதிக்கை வரும் மாணவர்களும், விரிவுரையாளர்களும் மட்டுமே இவ்வாத்தியங்கள் வாசிக்கப்பட்டன. இங்கு ஆண், பெண் சமத்துவம் முக்கியத்துவப் படுத்தப்பட்டு கூட்டாக இணைந்து இவ் ஆற்றுகை இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது இடம்பெற்ற இரண்டு முக்கிய விடயங்களை முன்வைக்க விழைகின்றேன். ஒன்று பாரம்பரிய மற்றையது சாதியம் ஆகும். இந்நிகழ்வின் போது பெண்கள் இணைந்து பறை, சவணிக்கை, கொம்பு, பிரம்ம தாளம் வாசிக்கப்பட்ட பாரம்பரிய சூழலில் வருகை தந்திருந்த பக்தர்கள் மத்தியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தி இருந்தது.

இரண்டாவது விடயமாக பாரம்பரிய இசை வாத்தியங்கள் வெறுமனே தனிய இசைக்கப்படாமல் ஏனைய நாதஸ்வரம், தவில் போன்ற வாத்தியங்களுடன் இணைந்து ஒலித்தமையும், கவனம் கொள்ளத்தக்கது.

புறத்தே பெரும் வாதப்பிரதிவாதங்களை கொள்ளப்படும் கேலிகளும் கிண்டல்களும் எப்படியோ அவர்கள் அசராது திமிறி நின்றனர்.

பாரம்பரிய பண்பாட்டு வாத்தியங்கள் எப்போதும் குறித்த மனித சமூகங்களை அடையாளப்படுத்தும் அல்லது அவர்களது வாழ்வியலோடு இணைந்திருக்க அமையும் தன்மை மிக்கவை. இவ்வாறே மேற்குறித்த வாத்தியங்களும் செந்நெறி வாத்தியங்களுடன் இணைப்பெற்று ஒருமித்த ஓசைகளுடன் சுவாமி வீதி உலாவின் போது இவை இரண்டும் இணைந்து வாசிக்கப்பட்டமை, பட்டாசு ஒலிகளையும் விட மேலோங்கித் தாக்கி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சுவாமி உலாவின் போது சுவாமியை பார்த்த கண்களை விட வாத்திய முழக்கங்களை கவனித்த கண்களே அதிகமாக காணப்பட்டது. இவ்வாத்திய முழக்கம் பெரும் வரவேற்பையும் பாராட்டுக்களையும் பெற்றது.

இங்கு காணப்படும் சாதிய ஒதுக்கல்கள், புறக்கணிப்பு, பிரித்துப் பார்த்தல், அடிமைப்படுத்தல், ஒதுக்கப்படல் போன்ற தன்மை நீங்கி ஓரே மக்கள் ஓரே மனிதர் சமூகம் என்ற தன்மையை கட்டியெழுப்பியது.

இப்பாரசிகர் செய்மாடு மாமாங்க திருவிழா வரலாற்றில் இடம்பெற்ற ஒரு வரலாற்று குறிப்பு ஆகும். ஆனாலும் சில மதவாதிகளும் சில மிதவாதிகளும் இப்பாரசிகர் செயற்பாட்டினை விமர்சித்திருந்தனர்.

"ஒரு பெண் பிள்ளை எப்படி பறையடிக்கலாம் அதுவும் கோயிலில் சுவாமி உலாவில் இத்தகைய வாத்தியங்கள் பாவிக்க முடியாது "ஆகாது" இது இறந்த வீடுகளில் அடிப்பது எப்படி கோயில் திருவிழாவில் வாசிக்க முடியும் அமங்கலமான செயற்பாடு இது" என கண்டித்து இருந்தனர்.

எப்போதும் இசையை எழுப்பும் வாத்தியங்கள் யாவும் "வாசித்தல்" என அழைக்கப்படுவது வழமை. ஆனால் இங்கு மதவாதிகள் அந்த நாகரிகமான பதப்பிரயோகத்தினை விடுத்து "அடித்தல்" எனும் பிரயோகத்தினை மிகக் கோரமான ஒலியில் வாசித்தனர். இங்கு அவர்களது சிறுமைத்தனத்தை புலப்படுத்தி இருக்க பறை, தப்பு போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்படாமையானது தெய்வக்குற்றமாகவே கருதினர்.

தெய்வங்கள் கூட இவ்வாறான வாத்தியங்களையே வாசிக்கின்றமையும், எந்திரிப்பதையும், இவ்வாறான வாத்திய இசைகளுக்கு அடிமையானவர்கள் என்பதையும் இவ்வாத்தியங்களை வாசிக்கும் சமூகங்கள் இடத்தே தான் தெய்வங்கள் அதிக சுற்றுடு கொண்டவர்கள் என்ற வரலாறுகளை இவர்கள் மறந்துவிட்டார்களா அல்லது மறந்துவிட்டார்களா என்பதுதான்?

ஆனாலும் மேற்குறித்த எதிர்ப்புக்கள் மத்தியிலும் செயற்பாட்டுத் தூண்டல் கள் காரணமாக கருத்தியல் கொள்கைகள் பார்வைப் பரிமாற்றத்திற்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் நடைமுறை மாற்றத்திற்கும் உந்தி இட்டுச் சென்றிருக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கது.

நிஜூஜா ஜெகநாதன்
நுண்கலைத்துறை
உதவி விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்.



# திருத்தச் சட்டங்களில் சிறுபான்மை மக்களின் நலன்கள் பேணப்படுவது அவசியமானது

## நாடாளுமன்றில் 19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த விவாதத்தில், சந்திரகுமார் எம்.பி. ஆற்றிய உரை

**தேர்தல் முறைமை தொடர்பான திருத்தச் சட்டமூலங்களாக இருந்தாலென்ன வேறெந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலங்களாக இருந்தாலென்ன அந்த சட்டமூலங்களை வரைவோர் - திருத்துவோர் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்கள் தொடர்பாகவும் அக்கறையுடன் செயற்பட்டு அந்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும்.**

**கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,**

இலங்கையிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த, மக்கள் மிகவும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் இந்த அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தம் நிறைவேற்றப்பட இருக்கின்றது. எல்லோருடைய கருத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இந்த அரசியலமைப்புக்கான திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமாக இருக்கின்றது.

அரசியலமைப்புக்கான திருத்தம் மக்களுக்கும் நாட்டுக்கும் பயனுடையதாக வரும்போதுதான் நாம் முழுமையான மனதோடு அதை ஆதரிப்போம். அந்த வகையில் இந்தச் சட்டத் திருத்தத்தைச் சில திருத்தங்களுடன் நாங்கள் ஏற்றுக்கொள்ள அல்லது ஆதரிக்கத் தயாராகவே இருக்கின்றோம்.

அதேவேளை இந்த நாட்டிலுள்ள இன்னும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகப் பொருத்தமான சட்டமூலங்களை உருவாக்க வேண்டியுள்ளது. இலங்கை பல்லினச் சமூகங்கள் வாழும் ஒரு நாடு என்ற வகையில் ஜனநாயகத்தையும் சமநீதியையும் சரியாக நெறிப்படுத்தக்கூடிய சட்டமூலங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற அவர்களின் உணர்வுகளையும் அவர்களுடைய அடிப்படை உரிமைகளையும் மதிக்கின்ற உத்தரவாதப்படுத்துகின்ற வகையில் இந்தச் சட்டமூலங்கள் அமைய வேண்டும். குறிப்பாக அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்திலே அரசியல் யாப்புப் பேரவையில் பன்முகத்தன்மை இருக்க வேண்டும் என்ற வரிதான் குறிப்பிடப்பட்டிருக்கின்றதே தவிர பன்முகத் தன்மை என்ற பதத்துக்கான அர்த்தம் விரிவாக்கப்படவில்லை. சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படவில்லை. இதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த அரசியலமைப்புப் பேரவை கிட்டத்தட்ட 11 ஆணைக்குழுக்களை நியமிக்கப் போகின்றது. அந்த 11 ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை அரசியல் யாப்புப் பேரவைதான் தீர்மானிக்கப் போகின்றது. அந்தப் பேரவையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் அந்த ஆணைக்குழுக்கள் தமிழ் மக்களின் அல்லது முஸ்லிம் மக்களின் நலன்சார்ந்த விடயங்களில் எந்தளவு அக்கறை செலுத்தும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

அந்தவகையில்தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் எங்களது கட்சியும் இணைந்து இந்த பன்மைத் தன்மை என்ற பதத்தை மாற்றி இன விகிதாசார அடிப்படையில் அதற்குப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகின்றோம். திருத்தத்துக்கான முன்மொழிவுகளில் அது சேர்க்கப்பட வேண்டுமென்ற பரிந்துரை இன்று குழுநிலையிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதையும் நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

பொதுவாக 11 ஆணைக்குழுக்கள் சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இருந்தபோதிலும் அந்த சுயாதீனம் என்பதன் மூலம் சிறுபான்மைச் சமுகங்களுக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படாமல் இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் இப்படி அரசியலமைப்பின் திருத்தச் சட்டங்கள் ஒவ்வொரு மாதத்துக்கோ ஒவ்வொரு வருடத்துக்குமோ வருவதல்ல.

18ஆவது திருத்தச் சட்டம் பல விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் அது தொடர்பாகவே இந்த 19ஆவது திருத்தச் சட்டம் இந்த நாட்டுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் உணர்ப்பட்டிருக்கின்றது. ஆகவே அதனைக் கொண்டுவரும்போது அதற்கு சரியான அர்த்தங்கள் இருக்கும்போதுதான் அது எல்லா மக்களுக்கும் சம நீதியான ஓர் ஏற்பாட்டை வழங்கும்.

மேலும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்த முன்மொழிவுகளில் எங்களது கட்சி சார்பாக, இன மற்றும் மத நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான ஓர் ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தியிருக்கின்றோம். ஏனென்றால் இன நல்லிணக்கம் சம்பந்தமாக சட்டரீதியான ஓர் ஏற்பாடு எங்களுக்கு இருக்கும்போது தான் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கூடாகத் தங்களுக்குரிய நியாயங்களைப் பெறமுடியும்.

இந்த ஆணைக்குழுக்கள் நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறக்கூடிய ஆணைக்குழுக்களாக அமைவது முக்கியமானது. அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகமாகக் கொண்ட அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்பட வேண்டுமென்று இப்போது வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

வெறுமனே நாடாளுமன்றத்துக்கு வெளியே இருக்கும் அதிகாரிகளை வைத்துக்கொண்டு இந்த அரசியலமைப்புப் பேரவை உருவாக்கப்படுவதால் நீதியான நியாயமான அடிப்படையில் எல்லா மக்களும் பார்க்கப்படும் நிலைமைகள் இல்லாமற் போய்விடும். இந்த இணக்கப்பாடு நீதியான முறையில் எட்டப்பட வேண்டுமென்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

19 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் நிறைவேற்றத்துக்குப் பின்பு நாங்கள் இருபதாவது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டு வரவிருக்கிறோம். இந்த நாட்டின் தேர்தல் முறைமையிலே மாற்றத்தைக் கொண்டுவருவது தொடர்பான இருபதாவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக பல முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை இரு பெரும் கட்சிகளின் நலன் சார்ந்த விடயமாக இருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.

அண்மையில் நாட்டிலே இருக்கின்ற சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றன. அந்த தீர்மானத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வரைபு அரசின் தலைவரான ஜனாதிபதி அவர்களுக்கும் பிரதமர் அவர்களுக்கும் சபாநாயகர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் வழங்கவிருக்கிறோம். அந்த முன்மொழிவுகள் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான ஒரு தேர்தல் முறைமை என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏனென்றால் உண்மையாகவே ஜனநாயகம் பேணப்பட வேண்டுமாயின் எல்லா இனங்களுக்கும் சமனாக - அவர்களுடைய இன விகிதாசாரத்துக்கேற்ப - பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். தேர்தல் முறைமை தொடர்பாக இரு பெரிய கட்சிகளும் தத்தமது நலன்களை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்து தங்களது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதில் குறியாய் இருக்கும்பொழுது இங்கு சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாகிவிடும்.

அந்த வகையில் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் நலன்கள் அபிலாஷைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கொண்டுவரப்படும் இருபதாவது திருத்தச் சட்டமூலத்தைத்தான் அக்கட்சிகளால் ஆதரிக்க முடியும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்துகின்றோம்.

ஏற்கெனவே எழுபதுக்கும் மேற்பட்ட சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே அங்கம் வகிக்கின்றார்கள். அவர்களின் எதிர்ப்பை மீறி அவர்களின் உடன்பாடில்லாமல் தேர்தல் முறைமை தொடர்பான எந்தவொரு திருத்தச் சட்டமூலத்தையும் இந்த நாடாளுமன்றத்திலே நிறைவேற்ற முடியாதென்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இங்கே நாங்கள் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைக்கின்றோம். கடந்த காலங்களில் பல ஜனாதிபதிகள் இங்கு இருந்தார்கள். அவர்களில் பலர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்தாலும் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைக் குறைக்க ஒருவரும் முன்வரவில்லை. தற்போதைய ஜனாதிபதி தனது அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்கு கையளிக்கும் பெருந்தன்மையான முடிவை எடுத்திருப்பதை நான் இந்த சபையிலே வரவேற்கின்றேன்.

தேர்தல் முறைமை தொடர்பான திருத்தச் சட்டமூலங்களாக இருந்தாலென்ன வேறெந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலங்களாக இருந்தாலென்ன அந்த சட்டமூலங்களை வரைவோர் - திருத்துவோர் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்கள் தொடர்பாகவும் அக்கறையுடன் செயற்பட்டு அந்த விடயத்தை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த தேர்தல் காலத்தில் இந்த 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தை வரைவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முக்கிய பங்கு வகித்தாரென்று சொல்லப்படுகின்றது. ஆனால் தேர்தல் சட்டத் திருத்தம் பற்றிய முன்மொழிவில் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்கள் மற்றும் அவர்களது உரிய பிரதிநிதித்துவம் பேணப்படாமல் விடுபட்டிருக்கின்றன.

ஆகவே இதுபோன்ற சிறுபான்மை மக்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் திருத்தச் சட்டமூலங்களில் தங்களது காத்திரமான பங்களிப்பை அவர்கள் செலுத்தாது வெளியே நிற்பது மிகவும் கவலைக்குரியதாக இருக்கின்றது. கடந்த காலத்தில் ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரப்பட்டபோதும் அதே உறுப்பினர் தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கின்றார்.

ஆகவே திறமையை வெளிப்படுத்தும் அரசியலமைப்பு சட்டத்தரணிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்பவர்கள் குறித்த சந்தர்ப்பங்கள் வரும்பொழுது தங்களது சமூகம் சார்ந்த சிந்தனையுடன் செயற்பட வேண்டும் என்பதை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

# இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி

## – நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

இளையதலைமுறைக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும் இந்த வகையில் இன்றைய இளந்தலைமுறைக்கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியின் பணிகள் பாராட்டுக்குரியது.

இவ்வாறு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடாத்தும் இயல் இசை நாடக விழா முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொடர்ந்து பேசுகையில் .

தமிழ் கூறும் நல்லுலகில் யாழ்ப்பாணம் மிகச் சிறந்த கலைஞர்கள் வாழ்கின்ற பூமி,குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேசத்திலே பிரபல பாடசாலைகள் அமைந்துள்ளன. அதேபோன்று புகழ்பூத்த கலைஞர்கள் நிறைந்து வாழும் பிரதேசமும் நல்லூர் ஆகும்.

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற இளைய தலைமுறைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் நாம் அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவேண்டும் இந்தப்பணியைத் தமது சொந்தச் செலவில் மேற்கொள்ளும் இலங்கை வேநதன் கலைக் கல்லூரியினரின் பணி போற்றுவதற்குரியது.

வடமாகாண அரசு கலைகளை வளர்ப்பதற்கும் கலைஞர்களை ஊக்குவிப்பதற்கும் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. கலைஞர்கள் தொடர்பு கொண்டு இத்திட்டங்களின் மூலம் பயன் பெறவேண்டும். தமிழர் தம்வாழ்வையும்இருப்பையும் பெருமைப்படுத்தும் கலைவடிவங்களை அரங்கேற்ற வேண்டும் இக்கலை வடிவங்களை நவீன உத்திகளுடன் இளைய தலைமுறையினருக்கு கையளிக்கவேண்டும்.

எமது பிரதேசத்தில் அடிக்கடி இது போன்ற கலை விழாக்கள் நடைபெற வேண்டும் இவ்விழாக்களில் கலையை இரசிப்பதோடு மட்டும் நின்று விடாது இங்கு உரை நிகழ்த்தும்அறிஞர்களின் சொற்பொழிவுகளை செவிமடுத்துப் பயன்பெற வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் வழங்கிய இசைவிருந்து, திருமறைக்கலாமன்ற கலைத்தூது அழகியற் கல்லூரி மாணவிகளின் நாட்டியாஞ்சலி, இன்றைய தமிழ் சினிமாவின் இரசணைமட்டம் ஏற்புடையதா? என்ற தலைப்பில் சொல்லாடுகளம், "இலங்கை வேந்தன்" இசை நடன நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (10)

## புதிய நிர்வாகசபைத் தெரிவு

பருத்தித்துறை அருள்மிகு ஆத்தியடி பிள்ளையார் கோவில் 2015, 2016 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுகள் நடைபெற்றன. இத் தெரிவின்போது தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் வருமாறு:-

தலைவர் த.சந்திரசேகரம்(இளைப்பாறிய அதிபர்), உபதலைவர் வ.கண்ணபிரான், செயலாளர் சோ.தங்கேஸ்வரன், உபசெயலாளர் ஆ.விஜயராம், பொருளாளர் க.செல்வரத்தினம், உபபொருளாளர், க.சுணாசீரன், முகாமையாளர் சோ.கனகசுந்தரம், உபமுகாமையாளர் இ.குகன்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் த.தங்கராசா, சி.சதாசிவம், ப.சிவநாதன், அ.றமணன், வே.க. பாலச்சந்திரன், தே.வாசுதேவன் அ.செந்திலிங்கம் ஆகியோராவர். (01)

## கசிப்பு உற்பத்தியை தடுக்க சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டம்

வாதரவத்தைப் பகுதியில் அதிகரித்துவரும் கசிப்பு விற்பனையை தடுத்து நிறுத்த கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம் நடாத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது

இக்கசிப்பு விற்பனையை கட்டுப்படுத்த வாதரவத்தை பகுதி கிராமசேவையாளர் பிரிவில் கிராம சேவையாளர் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவை நியமித்து விற்பனையை ஒழிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (08)

# சுவாமி சித்ரூபானந்தாவின் முதலாவது குருபூசை தினம்



பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ணசாரதா சேவாச்சிரமத்தலைவர் அதி வண.சுவாமி சித்ரூபானந்தாவின் முதலாவது குருபூசை தினமும், சித்திரா பௌணமி விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளன.

(சேவாச்சிரமம்) முன்னாள் செயலாளர் சாமஸ்ரீதேச ஜோதி ஏ.என்.எஸ். திருச்செல்வம் விழாவிற்குத்தலைமைதாங்குவார் பருத்தித்துறை குகன்ஸ் ஸ்ருடியோ உரிமையாளர் என். குகன் மங்கள விளகேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். இறைவணக்கத்தையடுத்து பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற முகாமைத்துவ ஆலோசகர் எஸ். இராஜரட்ணம் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சேமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சி[illegible] திபதி மோகன் சுவாமிகள் ஆகியோர் [illegible] களை வழங்குவார்கள்.

வடமராட்சி வடக்கு பிரதேச செய[illegible]ர் ஆர்.ரி. ஜெயசீலன் சிறப்புரை ஆற்றுவார் தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஏ.சிவநா[illegible] 'சமயமும், மனித வாழ்க்கையும்" பற்றி உ[illegible] றுவார் பருத்தித்துறை வடமராட்சி இந்து மக[illegible]ர் கல்லூரி மாணவிகளின் இசை நிகழ்வு சேவைக்கொரு சித்ரூபானந்தா பற்றி கே.ஆனந்தராஜா (அன்னதாசன்) வின் இசைச்சொற்பொழிவும் இடம் பெறவுள்ளன. சாவகச்சேரி வணிகர் கழக தலைவர் லயன் வடிவேல் ஸ்ரீபிரகாஸ் நன்றியுரை வழங்குவார். (01)



கைதடி நவசக்தி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டுகள் நிறைவையொட்டி நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பவனி நிகழ்வு... (90,51)

# பதிவிறக்கப் பெட்டகம்

"கண் சுத்தமா தெரியேல்லை... டொக்டரை பார்க்கவேணும்"
"கண் தெரியேல்லை என்று சொல்றீங்கள். அப்ப டொக்டரை எப்படிப் பார்ப்பீங்கள்?"

*** *** *** ***

**ஒருவர் :** நீங்கள் அறுவைச் சிகிச்சை நிபுணர் என்று கேள்விப்பட்டேன்.
**டொக்டர் :** ஆமாம், அதுக்கென்ன இப்போ?
**ஒருவர் :** நேரம் போகவில்லை... 1 மணி நேரம் அறுத்திட்டுப் போகலாமென்று வந்தேன்.

*** *** *** ***

"டொக்டர் ஏன் கோபமாய் இருக்கிறார்..?"
"ஒப்பரேஷன் தியேட்டர் வாசல்ல யாரோ "Oneway" என்று எழுதி வைச்சிட்டாங்களாம்..."

*** *** *** ***

"உன் மாமா நாட்டு வைத்தியம் பார்க்கிறார் என்று சொல்லுறியே, அதில எனக்கொரு சந்தேகம்..?"
"என்ன சந்தேகம்?"
"அதென்ன.... உள்நாட்டு வைத்தியமா... இல்லை அயல்நாட்டு வைத்தியமா?"

*** *** *** ***

"டொக்டர் நீங்கள் சொன்ன மாதிரி தினமும் அல்வா சாப்பிடுறேன். தொப்பை குறையவே இல்லை?"
"நாசமாப் போச்சு. தினமும் அளவா சாப்பிடுங்க என்று சொன்னது உங்க காதில தப்பா விழுந்திட்டுது"

*** *** *** ***

"டொக்டர் எனக்கு சுகர் அதிகமா இருக்கு."
"அப்படியா? எனக்கு ஒரு கிலோ தந்திட்டுப் போங்களேன்"

*** *** *** ***

"வாய்க்குள்ளே ஒரே குரூப் டான்ஸ்!"
"குரூப் டான்ஸா?"
"நாலஞ்சு பல்லா சேர்ந்து ஆடுது டொக்கடர்!"

*** *** *** ***

"நீங்கள் ஒப்பரேஷன் வேண்டாம் என்று சொன்னதுக்கு டொக்டர் என்ன சொன்னார்?"
"பிழைக்கத் தெரிஞ்ச ஆள் என்று பாராட்டினார்."

*** *** *** ***

"இப்பவெல்லாம் எனக்கு அதிகமா மறதி உண்டாகிறது டொக்டர்"
"அப்படியா? அடிக்கடி வருகிறதா?"
"எது டொக்டர்?"

*** *** *** ***

"டொக்டர், உடம்பு மெலிய ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள்"
"தினமும் வெறும் வயித்துல நடக்கவேணும்"
"யாருடைய வயித்துல டொக்டர்?"

*** *** *** ***

"எங்க ஈ காட்டுங்கோ பார்க்கலாம்..."
"உங்கட மூக்கு மேலே இருக்கு டொக்டர்"

*** *** *** ***

"டொக்டர் எனக்கு மூலம்"
"நல்லது... நல்லது... நானும் அதே ராசிதான். ஆனால் பூராடம் நட்சத்திரம்"

*** *** *** ***

"டொக்டர்..., உங்களை எப்ப ஃப்ரீயா பார்க்கலாம்?"
எப்பவும் ஃப்ரீயா பார்க்க மாட்டேன்..., ஃபீஸ் வாங்கிக்கொண்டுதான் பார்ப்பேன்"

*** *** *** ***

"நாய் கடிச்சிட்டுது ஐயய்யோ!"
"எங்கே?"
"ஜெய்நகர் முதலாம் குறுக்குத் தெருவில டொக்டர்!"
"உங்களை நாய் கடிச்சதில தப்பே இல்ல!"

*** *** *** ***

"அதோ போறாரே.., அவர் கண்ணை மூடிக்கொண்டுதான சாப்பிடுவார்"
"ஏன்?"
"கண்டதை சாப்பிடக்கூடாதென்று டொக்டர் சொல்லியிருக்கிறாராம்"

*** *** *** ***

"எனக்கு 100வயது வரைக்கும் வாழ ஆசை! அதுக்கு நான் என்ன பண்ண வேணும் டொக்டர்?"
"99வயது முடிஞ்சதும் வாங்கோ சொல்றேன்"

*** *** *** ***

"கையில கட்டுப் போட்டேனே...., இப்ப எப்படி இருக்கு?"
"அவிழாமல் அப்படியேதான் இருக்கு டொக்டர்!"

# உயர்தரப் பரீட்சை - 2015 நேர அட்டவணை

## எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை - 2015 இன் நேர அட்டவணை பரீட்சை ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது

| | උදය වාරය / முற்பகல் / Morning Session | සවස් වාරය / பிற்பகல் / Afternoon Session |
|---|---|---|
| | අගෝස්තු 04 අඟහරුවාදා / ஆகஸ்ட் 04 செவ்வாய்க்கிழமை / Tuesday, 04th August | |
| 1 | 0830 - 1130<br>10 සංයුක්ත ගණිතය I / இணைந்த கணிதம் I /Combined Mathematics I<br>0830 - 1030<br>78 අරාබි I / அரபு I / Arabic I | 1230 - 1430<br>09 ජීව විද්‍යාව I / உயிரியல் I / Biology I<br>21 ආර්ථික විද්‍යාව I / பொருளியல் I / Economics I<br>79 මැලේ I / மலாய் I / Malay I |
| | අගෝස්තු 05 බදාදා / ஆகஸ்ட் 05 புதன்கிழமை / Wednesday, 05th August | |
| 2 | 0830 - 1030<br>52 නර්තනය (දේශීය) I / நாட்டியம் (தேசிய) I / Dancing (Indigenous) I<br>53 නර්තනය (භරත) I / நாட்டியம் (பரதம்) I / Dancing (Bharatha) I<br>54 පෙරදිග සංගීතය I / கீழைத்தேய சங்கீதம் I / Oriental Music I<br>55 කර්ණාටක සංගීතය I /கர்நாடக சங்கீதம் I / Carnatic Music I<br>56 බටහිර සංගීතය I / மேலைத்தேய சங்கீதம் I /Western Music I<br>0830 - 1130<br>51 චිත්‍ර කලාව I / சித்திரக்கலை I / Art I | 1230 - 1530<br>09 ජීව විද්‍යාව II / உயிரியல் II / Biology II<br>21 ආර්ථික විද්‍යාව II / பொருளியல் II /Economics II<br>79 මැලේ II / மலாய் II / Malay II |
| | අගෝස්තු 06 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 06 வியாழக்கிழமை / Thursday, 06th August | |
| 3 | 0830 - 1030<br>65 ඉංජිනේරු තාක්ෂණවේදය I / பொறியியற் தொழினுட்பவியல் I/ Engineering Technology I<br>66 ජෛව පද්ධති තාක්ෂණවේදය I/ உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் I/ Bio Systems Technology I<br>0830 - 1130<br>10 සංයුක්ත ගණිතය II / இணைந்த கணிதம் II / Combined Mathematics II<br>52 නර්තනය (දේශීය) II / நாட்டியம் (தேசிய) II / Dancing (Indigenous) II<br>53 නර්තනය (භරත) II / நாட்டியம் (பரதம்) II / Dancing (Bharatha) II<br>78 අරාබි II / அரபு II / Arabic II | 1230 - 1430<br>08 කෘෂි විද්‍යාව I / விவசாய விஞ்ஞானம் I / Agricultural Science I<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය I / கிரேக்க உரோம நாகரிகம் I / Greek and Roman Civilization I<br>83 රුසියන් I / ருசியன் I / Russian I |
| | අගෝස්තු 07 සිකුරාදා / ஆகஸ்ட் 07 வெள்ளிக்கிழமை / Friday, 07th August | |
| 4 | 0830 - 1030<br>32 ව්‍යාපාර අධ්‍යයනය I / வணிகக் கல்வி I / Business Studies I<br>82 ජර්මන් I / ஜேர்மன் I / German I<br>86 චීන I / சீன மொழி I / Chinese I | 1400 - 1700<br>51 චිත්‍ර කලාව II / சித்திரக்கலை II / Art II<br>54 පෙරදිග සංගීතය II / கீழைத்தேய சங்கீதம் II / Oriental Music II<br>55 කර්ණාටක සංගීතය II / கர்நாடக சங்கீதம் II / Carnatic Music II<br>56 බටහිර සංගීතය II / மேலைத்தேய சங்கீதம் II /Western Music II |
| | අගෝස්තු 08 සෙනසුරාදා / ஆகஸ்ட் 08 சனிக்கிழமை / Saturday, 08th August | |
| 5 | 0830 - 1030<br>01 භෞතික විද්‍යාව I / பௌதிகவியல் I / Physics I<br>0830 - 1130<br>32 ව්‍යාපාර අධ්‍යයනය II / வணிகக் கல்வி II / Business Studies II<br>82 ජර්මන් II / ஜேர்மன் II / German II | 1230 - 1530<br>65 ඉංජිනේරු තාක්ෂණවේදය II / பொறியியற் தொழினுட்பவியல் II / Engineering Technology II<br>66 ජෛව පද්ධති තාක්ෂණවේදය II / உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் II / Bio Systems Technology II<br>71 සිංහල I / சிங்களம் I / Sinhala I<br>72 දෙමළ I / தமிழ் I / Tamil I |
| | අගෝස්තු 10 සඳුදා / ஆகஸ்ட் 10 திங்கட்கிழமை / Monday, 10th August | |
| 6 | 0830 - 1130<br>08 කෘෂි විද්‍යාව II / விவசாய விஞ்ஞானம் II / Agricultural Science II<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය II / கிரேக்க உரோம நாகரிகம் II / Greek and Roman Civilization II<br>83 රුසියන් II / ருசியன் II / Russian II<br>86 චීන II / சீன மொழி II / Chinese II | 1230 - 1430<br>28 ගෘහ ආර්ථික විද්‍යාව I / மனைப் பொருளியல் I / Home Economics I |
| | අගෝස්තු 11 අඟහරුවාදා / ஆகஸ்ட் 11 செவ்வாய்க்கிழமை / Tuesday , 11th August | |
| 7 | 0830 - 1130<br>01 භෞතික විද්‍යාව II / பௌதிகவியல் II / Physics II<br>51 චිත්‍ර කලාව III / சித்திரக்கலை III / Art III | 1230 - 1530<br>71 සිංහල II / சிங்களம் II / Sinhala II<br>72 දෙමළ II / தமிழ் II / Tamil II |
| | අගෝස්තු 12 බදාදා / ஆகஸ்ட் 12 புதன்கிழமை / Wednesday, 12th August | |
| 8 | 0830 - 1030<br>24 තර්ක ශාස්ත්‍රය සහ විද්‍යාත්මක ක්‍රමය I / அளவையியலும் விஞ்ஞான முறையும் I / Logic & Scientific Method I | 1230 - 1530<br>28 ගෘහ ආර්ථික විද්‍යාව II / மனைப் பொருளியல் II / Home Economics II |
| | අගෝස්තු 13 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 13 வியாழக்கிழமை/ Thursday, 13th August | |
| 9 | 0830 - 1030<br>02 රසායන විද්‍යාව I / இரசாயனவியல் I / Chemistry I<br>67 තාක්ෂණවේදය සඳහා විද්‍යාව I / தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் I / Science for Technology I<br>75 සංස්කෘත I / சமஸ்கிருதம் I / Sanskrit I<br>81 ප්‍රංශ I / பிரெஞ்சு I / French I | 1230 - 1530<br>24 තර්ක ශාස්ත්‍රය සහ විද්‍යාත්මක ක්‍රමය II / அளவையியலும் விஞ்ஞான முறையும் II / Logic & Scientific Method II |
| | අගෝස්තු 14 සිකුරාදා / ஆகஸ்ட் 14 வெள்ளிக்கிழமை / Friday, 14th August | |
| 10 | 0830 - 1030<br>14 සිවිල් තාක්ෂණවේදය I/ குடிசார்த் தொழினுட்பவியல் I / Civil Technology I<br>15 යාන්ත්‍රික තාක්ෂණවේදය I/பொறிமுறைத் தொழினுட்பவியல் I / Mechanical Technology I<br>16 විදුලිය, ඉලෙක්ට්‍රොනික හා තොරතුරු තාක්ෂණවේදය I/ மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் I / Electrical, Electronic and Information Technology I<br>17 ආහාර තාක්ෂණවේදය I/ உணவுத் தொழினுட்பவியல் I / Food Technology I<br>18 කෘෂි තාක්ෂණවේදය I/ விவசாயத் தொழினுட்பவியல் I /Agro Technology I<br>19 ජෛව සම්පත් තාක්ෂණවේදය I/ உயிர் வளத் தொழினுட்பவியல் / Bio-ResourceTechonology I<br>74 පාලි I / பாளி I / Pali I | 1400 - 1700<br>25 A ඉන්දීය ඉතිහාසය II / இந்திய வரலாறு II / History of India II<br>25 B යුරෝපා ඉතිහාසය II / ஐரோப்பிய வரலாறு II / History of Europe II<br>25 C නූතන ලෝක ඉතිහාසය II / நவீன உலக வரலாறு II / History of Modern World II |
| | අගෝස්තු 15 සෙනසුරාදා / ஆகஸ்ட் 15 சனிக்கிழமை / Saturday, 15th August | |
| 11 | 0830 - 1130<br>02 රසායන විද්‍යාව II / இரசாயனவியல் II / Chemistry II<br>67 තාක්ෂණවේදය සඳහා විද්‍යාව II / தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் II/ Science for Technology II<br>75 සංස්කෘත II / சமஸ்கிருதம் II / Sanskrit II<br>81 ප්‍රංශ II / பிரெஞ்சு II / French II | 1230 - 1430<br>23 දේශපාලන විද්‍යාව I / அரசியல் விஞ்ஞானம் I / Political Science I |
| | අගෝස්තු 17 සඳුදා / ஆகஸ்ட் 17 திங்கட்கிழமை / Monday, 17th August | |
| 12 | 0830 - 1130<br>13 සාමාන්‍ය ඉංග්‍රීසි I / பொது ஆங்கிலம் I /General English I | 1230 - 1500<br>13 සාමාන්‍ය ඉංග්‍රීසි II / பொது ஆங்கிலம் II / General English II |
| | අගෝස්තු 18 අඟහරුවාදා / ஆகஸ்ட் 18 செவ்வாய்க்கிழமை / Tuesday , 18th August | |
| 13 | 0830 - 1030<br>41 බුද්ධ ධර්මය I / பௌத்தம் I / Buddhism I<br>42 හින්දු ධර්මය I / இந்து சமயம் I / Hinduism I<br>43 ක්‍රිස්තියානි ධර්මය I / கிறிஸ்தவம் I / Christianity I<br>44 ඉස්ලාම් I / இஸ்லாம் I / Islam I<br>45 බෞද්ධ ශිෂ්ටාචාරය I / பௌத்த நாகரிகம் I / Buddhist Civilization I<br>46 හින්දු ශිෂ්ටාචාරය I / இந்து நாகரிகம் I / Hindu Civilization I<br>47 ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I / இஸ்லாமிய நாகரிகம் I / Islam Civilizaton I<br>49 ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I / கிறிஸ்தவ நாகரிகம் I / Christian Civilizaton I | 1230 - 1430<br>29 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I / தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I / Communication & Media Studies I |
| | අගෝස්තු 19 බදාදා / ஆகஸ்ட் 19 புதன்கிழமை / Wednesday, 19th August | |
| 14 | 0830 - 1130<br>73 ඉංග්‍රීසි I / ஆங்கிலம் I / English I | 1230 - 1530<br>25 ශ්‍රී ලංකා ඉතිහාසය I / இலங்கை வரலாறு I / History of Sri Lanka I |
| | අගෝස්තු 20 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 20 வியாழக்கிழமை / Thursday, 20th August | |
| 15 | 0830 - 1130<br>14 සිවිල් තාක්ෂණවේදය II/குடிசார்த் தொழினுட்பவியல் II / Civil Technology II<br>15 යාන්ත්‍රික තාක්ෂණවේදය II/ பொறிமுறைத் தொழினுட்பவியல் II / Mechanical Technology II<br>16 විදුලිය, ඉලෙක්ට්‍රොනික හා තොරතුරු තාක්ෂණවේදය II/மின், இலத்திரன், தகவல் தொழினுட்பவியல் II / Electrical, Electronic and Information Technology II<br>17 ආහාර තාක්ෂණවේදය II/உணவுத் தொழினுட்பவியல்II /Food Technology II<br>18 කෘෂි තාක්ෂණවේදය II/விவசாயத் தொழினுட்பவியல் II /Agro Technology II<br>19 ජෛව සම්පත් තාක්ෂණවේදය II/ உயிர் வளத் தொழினுட்பவியல் II / Bio-Resource Techonology II<br>74 පාලි II / பாளி II / Pali II | 1230 - 1430<br>22 භූගෝල විද්‍යාව I / புவியியல் I / Geography I |
| | අගෝස්තු 21 සිකුරාදා / ஆகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை / Friday, 21st August | |
| 16 | 0830 - 1130<br>23 දේශපාලන විද්‍යාව II / அரசியல் விஞ்ஞானம் II / Political Science II | 1400 - 1700<br>73 ඉංග්‍රීසි II / ஆங்கிலம் II / English II |
| | අගෝස්තු 22 සෙනසුරාදා / ஆகஸ்ட் 22 சனிக்கிழமை / Saturday, 22nd August | |
| 17 | 0830 - 1030<br>33 ගිණුම්කරණය I / கணக்கீடு I / Accounting I<br>84 හින්දි I / ஹிந்தி I / Hindi I | 1230 - 1530<br>22 භූගෝල විද්‍යාව II / புவியியல் II / Geography II |
| | අගෝස්තු 24 සඳුදා / ஆகஸ்ட் 24 திங்கட்கிழமை / Monday, 24th August | |
| 18 | 0830 - 1130<br>41 බුද්ධ ධර්මය II / பௌத்தம் II / Buddhism II<br>42 හින්දු ධර්මය II / இந்து சமயம் II / Hinduism II<br>43 ක්‍රිස්තියානි ධර්මය II / கிறிஸ்தவம் II / Christianity II<br>44 ඉස්ලාම් II / இஸ்லாம் II / Islam II<br>45 බෞද්ධ ශිෂ්ටාචාරය II / பௌத்த நாகரிகம் II / Buddhist Civilization II<br>46 හින්දු ශිෂ්ටාචාරය II / இந்து நாகரிகம் II / Hindu Civilization II<br>47 ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II/ இஸ்லாமிய நாகரிகம் II / Islam Civilization II<br>49 ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II / கிறிஸ்தவ நாகரிகம் II / Christian Civilization II | 1230 - 1530<br>29 සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II / தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II / Communication & Media Studies II |
| | අගෝස්තු 25 අඟහරුවාදා / ஆகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை / Tuesday , 25th August | |
| 19 | 0830 - 1130<br>33 ගිණුම්කරණය II / கணக்கீடு II / Accounting II<br>84 හින්දි II / ஹிந்தி II / Hindi II | 1230 - 1430<br>20 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය I / தகவல், தொடர்பாடல் தொழினுட்பவியல் I /Information & Communication Technology I |
| | අගෝස්තු 26 බදාදා / ஆகஸ்ட் 26 புதன்கிழமை / Wednesday, 26th August | |
| 20 | 0830 - 1030<br>31 ව්‍යාපාර සංඛ්‍යානය I / வணிகப் புள்ளிவிபரவியல் I/ Business Statistics I<br>0830 - 1130<br>57 නාට්‍ය හා රංග කලාව (සිංහල) I / நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) I / Drama & Theatre (S) I<br>58 නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I / நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I / Drama & Theatre (T) I<br>59 නාට්‍ය හා රංග කලාව (ඉංග්‍රීසි) I / நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) I / Drama & Theatre (E) I | 1230 - 1530<br>07 ගණිතය I / கணிதம் I / Mathematics I<br>11. උසස් ගණිතය I /உயர் கணிதம் I / Higher Mathematics I<br>1230 - 1430<br>87 ජපන් I / ஜப்பான் I / Japanese I |
| | අගෝස්තු 27 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 27 வியாழக்கிழமை / Thursday, 27th August | |
| 21 | 0830 - 1130<br>31 ව්‍යාපාර සංඛ්‍යානය II / வணிகப் புள்ளிவிபரவியல் II /Business Statistics II<br>57 නාට්‍ය හා රංග කලාව (සිංහල) II / நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) II / Drama & Theatre (S) II<br>58 නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) II / நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II / Drama & Theatre (T) II<br>59 නාට්‍ය හා රංග කලාව (ඉංග්‍රීසි) II / நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)II / Drama & Theatre (E) II | 1230 - 1530<br>07 ගණිතය II / கணிதம் II / Mathematics II<br>11 උසස් ගණිතය II / உயர் கணிதம் II / Higher Mathematics II<br>87 ජපන් II / ஜப்பான் II / Japanese II |
| | අගෝස්තු 28 සිකුරාදා / ஆகஸ்ட் 28 வெள்ளிக்கிழமை / Friday, 28th August | |
| 22 | 0830 - 1100<br>12 සාමාන්‍ය පොදු පරීක්ෂණය / பொதுச் சாதாரணப் பரீட்சை / Common General Test | 1400 - 1700<br>20 තොරතුරු හා සන්නිවේදන තාක්ෂණය II / தகவல், தொடர்பாடல் தொழினுட்பவியல் II / Information & Communication Technology II |

59. எப்போசனைச்சத்து குறைபாட்டினால் மாலைக்கண் நோய் ஏற்படும்?
(1). விற்றமின் B (2). விற்றமின் A (3). புரதம் (4). கொழுப்பு

60. போசனைச்சத்துக்களில் அதிகளவு எமது உடலுக்கு தேவைப்படாதது எது?
(1). புரதம் (2). மாச்சத்து (3). விற்றமின் (4). கொழுப்பு

61. பருத்த உடல் அமைப்பை கொண்ட ஒருவர் ஆரோக்கியமான வாழ்வுக்கு அடிக்கடி செய்ய வேண்டியது
(1). நித்திரையில் ஈடுபடுதல் (2). அதிகமாக நீர் அருந்துதல்
(3). உடற்பயிற்சி செய்தல் (4). உணவு உண்பதை தவிர்த்தல்


62. மத்தள விமான நிலையம் அமைந்திருப்பது
(1). காலியில் (2). அம்பாந்தோட்டையில்
(3). கொழும்பில் (4). பதுளையில்

63. தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னணியில் உள்ள நாடு
(1). இலங்கை (2). பாகிஸ்தான் (3). ஜப்பான் (4). சிங்கப்பூர்

64. காய்ந்தவுடன் வெடிப்புக்குள்ளாகும் மண் வகை எது?
(1). மணல் மண் (2). செம்மண் (3). இருவாட்டி மண் (4). களிமண்


65. பின்வருவனவற்றுள் ஒளிரும் மின்குமிழ் எது?

1) 2) 3) 4)



66. பின்வரும் உடுக்கோலத்தில் தேள் எது?

1) 2) 3) 4)



67. கடதாசித்துண்டுகளையும் பசையையும் பயன்படுத்தி வெளிக்கொணரப்படும் ஆக்கம் எது?
(1). ஒரிகாமி (2). பத்திக் (3). கொலாஜ் (4). டெம்பலட்

### நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01) 01. 2முறை 02. 20 03. வெட்டும்பல் 04. துன்பம் 05. பல்துலக்காமை
06. 8 07. குறித்த நேரத்திற்கு பல் துலக்குதல் 08. கந்தையானாலும் கசக்கிக் கட்டி
09. சரியாக உச்சரிக்க முடியாது 10. அரைதல் 11. 1. முரசுகரைதல் 2. பற்சூத்தை
12. குறித்த நேரத்திற்க பல் துலக்காமை (02) 13. பல் வைத்தியர் (03) 14. பஞ்சு 15. இறப்பர்
16. பூசணி 17. நாயுருவி (04) 18. பறவைகள் 19. எறும்புகள் 20. மான்
21. புதுவருடம் (05) 22. 20,30,25,60,50,10 23. சாந்தி 24. நந்தினி
25. வீரர் - கந்தசாமி வீராங்கனி - சாந்தி 26. 2ம் குழுவினர்
(06). 27. கிடைக்காத ஒன்று 28. போலிவேடம் (07). 29. தாயே 30. தாரகை
31. அல்லி 32. பூமி 33. புல் வெளிகள் 34. குறைந்த 35. திடல்
(08). 36. 2 37. 1 (09). 38 - 41 வரை விரும்பிய வசனம்
(10). 42. யானை, பூனை, நரி 43. ஏதாவது ஒரு வயரை கழற்ற வேண்டும் 44. பாடினாள்
45. தின்றது 46. L 47. நானும் போனேன், அவனும் போனான் 48. நுளம்பு
49. பொங்கல் 50. விமானம் 51. டெங்கு, மூளைக்காய்ச்சல், மலேரியா

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(01) பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

காலையில் சூரியன் உதித்திடுவான்
காணும் இருளை விலக்கிடுவான்
கதிர்கள் பரப்பி எழுந்திடுவான்
கவின் மிகு காட்சி தந்திடுவான்

உலகம் சிறக்க உதவிடுவான்
உயிர்கள் வாழ உதவிடுவான்
வான மங்கை மனம் மகிழ
வண்ண ஒளியைத் தந்திடுவான்

01. இருளை விலக்கி ஒளியை தருபவன் யார்? ..........
02. இரண்டாம் பாடலில் உள்ள பெயரடைமொழியை தருக? ..........
03. ஞாலம் என்ற சொல்லின் ஒத்தசொல்லை தருக? ..........
04. காலையில் சூரியன் உதித்திடுவான் இவ்வாக்கியத்தில் எழுவாய் எது? ..........
05. மங்கை எனும் சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக? ..........
06. ஒளி என்பதன் எதிர்ச்சொல்லைத் தருக? ..........

**(02) வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பில் இருந்து தெரிவு செய்து கோடிடுக**

07. காந்தியடிகள் சிறிது காலம் ..........தொழிலில் ஈடுபட்டார் (வலக்கறிஞர், வழக்கறிஞர்)
08. பிரபுவும் பாபுவும் ..........பிரியாத நண்பர்கள் (இனை, இணை)
09. ..........க்கும் பனைக்கும் எத்தனை வித்தியாசம் (தினை, திணை)
10. தனது ..........செல்வது அதர்மமான வழி என அறிந்திருந்தான் (தமயன், தமையன்)

**(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக**

11. ஏகலைவன் என்னும் சொல் அஃறிணை, ஒருமை பெயர்ச்சொல்லாகும் ( )
12. வந்தனர் என்பது இறந்தகால, பன்மை வினைமுற்றாகும் ( )

**(04) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக**

13. please open your book ..........
14. Don't come here ..........

**(05) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்தில் மாற்றி எழுதுக**

15. நாம் பாட்டுப் பாடுவோம் ..........

**(06) விடுபட்ட ஆங்கில எழுத்தை எழுதுக**

16. Li.......n 17. Gre........n

**(07) கருத்தினை சிங்களத்தில் சொல்லப்படும் முறையில் தமிழில் எழுதுக**

18. உட்காருங்கள் - ..........

**(08) கருத்தினை தமிழில் எழுதுக**

19. செல்லம் கரன்ன யமுத? ..........

**(09) விடையைத் தெரிவு செய்து எழுதுக**

20. காலத்தினாற் செய்த ..........சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் ........................ (பெரிது, நன்றி நன்றி, பெரிது சிறிது, நன்றி)

21. இராமாயணத்தில் ........................ வருகிறான் (கர்ணன், ஏகலைவன், கும்பகர்ணன்)

22. ........................ ஓர் இணையற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் (தருமம், நன்றி, அஹிம்சை)

**(10) வெற்றிடத்தை நிரப்புக**

23. பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
........................
காலம் பார்க்க வேண்டும்

24. காலை மாலை எப்பொழுதும்
கடவுள் நினைவே கொண்டவராம்
வேலையின்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்
இப்பாடலில் கூறப்படும் பெரியவர் யார்? ........................

**(11) திருக்குறளை பூர்த்தி செய்க**

25. ........................ நன்றல்ல
தன்றே மறப்பது நன்று

**(12) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள சொற்களின் கருத்தினை தருக**

26. சான்றோர்கள் நன்றிக்கடனுக்காகத் தம்மையே **அர்ப்பணம்** செய்ய துணிவர். அர்ப்பணம் என்பது ........................

27. தனது தாயின் **சூழ்ச்சி**யாலேயே யாவும் நடந்தன இதில் சூழ்ச்சி என்பது ........................

28. பரதன் எள்ளளவும் **தருமம்** தவறாதவன். தருமம் என்பது ........................

**(13) இடைவெளியை நிரப்புக**

29. பிரபு கூலி எவ்வளவு எனக் ........................ (கேட்டாயா?, கேட்டேனா?)

30. எசமானின் பார்வையில் ஓராயிரம் செய்திகள் ........................ (மறைந்திருந்தது, மறைந்திருந்தன)

31. சுத்தம் பேணுதல் ஓர் இன்றியமையாத தேவையாக ........................ (அமைந்துள்ளது, அமைந்துள்ளன)

**(14) மகாத்மா காந்தியின் உயரிய குணங்கள் என்ற தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்**

32. ........................

33. ........................

34. ........................

**(15) வினாக்களுக்கு விடை தருக**

35. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக? 50021 ........................

36. உரோமன் இலக்கத்தில் எழுதுக? 1) ஒன்பது ........................ 2) பதின்நான்கு ........................

37. எண்கோலத்தை பூர்த்தி செய்க 1) 489, ........, ........, ........, 493, 494

2) 3 4 6 8 9 12 ........................

**(16) கிறிட்ட இடங்களை பூர்த்தி செய்க**

| பொருள் | செலுத்திய பணம் | |
|---|---|---|
| அரிசி | ........ | ........ |
| பருப்பு | ........ | ........ |
| பிஸ்கட் பைக்கற் | ........ | ........ |
| தே. எண்ணெய் | 350 | 00 |
| மொத்தம் | ........ | ........ |


38. 1kg அரிசியின் விலை ரூபா 125 வீதம் 3kg அரிசி

39. 1kg பருப்பின் விலை ரூபா 120வீதம் 250g பருப்பு

40. பிஸ்கட் பைக்கற்று ஒன்றின் விலை ரூபா 95 வீதம் 3 பைக்கற்றுக் களின் விலை



41. கனவுரு ஒன்றின் பக்கதோற்றங்கள் காட்டப்பட்டுள்ளன அவற்றினை குறிப்பிடுக




A - ........................


B - ........................

C - ........................




42. இப்பென்சிலின் நீளத்தை சென்ரிமீற்றரிலும், மில்லிமீற்றரிலும் தருக?


........................ Cm ........................ mm




43. கம்பி ஒன்றை வளைத்து இச் செவ்வக வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. இதே கம்பியை வளைத்து சதுரம் ஒன்றை தயார் செய்கையில், தயாரிக்கப்படும் 20cm சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது? ........................

44. ஒரு பாத்திரத்தில் 3 லீற்றர் 225 மில்லிலீற்றர் குளிர்பானம் உள்ளது. இக் குளிர்பானம் 5 சம போத்தல்களில் நிரப்பப்பட்டது. எனின் ஒரு போத்தல் கொள்ளும் குளிர்பானத்தின் அளவு யாது?

........................



45. இக்கனவுருவின் சதுர முகங்களில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?

........................

46. 0.3, 0.5 இரு தசம எண்களின் கூட்டுத்தொகை யாது? ........................

47. குறித்த சாக்கினுள் 105kg 750g செத்தல்மிளகாய் இட முடியும் எனின் அதே அளவான மூன்று சாக்கில் இடமுடியுமான செத்தல் மிளகாயின் நிறை யாது?

........................ kg ........................ g

48. எண்களை ஏறுவரிசைப்படுத்துக

1. 475, 407, 405, 470 ........................ 2. 5009, 5090, 5909, 5099 ........................

49. புகையிரத நிலையத்துக்கு 14.30க்கு வரவேண்டிய புகையிரதம் 35 நிமிடங்கள் முன்னதாகவே வந்தடைந்தது. எனின் புகையிரதம் வந்தடைந்த நேரம் யாது? ........................

**(17) சரியான விடையின் கீழ் கோடிடுக**

50. பின்வருவனவற்றுள் கொழுப்புச்சத்து நிறைந்த உணவு

(1). அப்பிள் (2). கயூவித்து (3). கோதுமை (4). பலாவித்து

51. இலங்கை இந்து சமுத்திரத்தின் ........................ அமைந்துள்ளது

(1). வலதுபக்கம் (2). இடப்பக்கம் (3). தெற்கில் (4). மத்தியில்

52. இலங்கைக்கே உரித்தான முளையூட்டி எது?

(1). அணில் (2). முஞ்சூறு (3). வெளவால் (4). பேய்ஓணான்

53. சூரிய நமஸ்காரமானது

(1). ஓர் உடற்பயிற்சி (2). தியானப்பயிற்சி (3). ஆரோக்கிய பயிற்சி (4). ஆன்மீக பயிற்சி

54. ஐந்திதழ் அமைப்பு கொண்ட மலரானது

(1). அல்லி (2). நித்திய கல்யாணி (3). நாகமலர் (4). கொன்றை

55. இருளை நாடும் விலங்கு

(1). நத்தை (2). ஈசல் (3). இலையான் (4). பல்லி

56. மணியாசு என்பது

(1). சாந்தை சுவரில் பூசுவதற்காக உதவும் (2). சாந்தை குழைப்பதற்காக உதவும்
(3). சாந்தை சுவரில் மட்டுப்படுத்த உதவும் (4). சாந்தை சுவரில் அடிப்பதற்காக உதவும்

57. இலங்கை தேசப்படத்தில் மத்திய மலைநாட்டை குறிக்கப் பயன்படும் நியம நிறம் யாது?

(1). நீலம் (2). பச்சை (3). சிவப்பு (4). கபிலம்

58. பின்வருவனவற்றுள் அனைத்தும் உண்ணி அல்லாதது எது?

(1). பூனை (2). நாய் (3). எறும்பு (4). புலி

# சர்வதேச சமூகம் தலையிடாத புதுயுகத்தை உருவாக்குவேன்

## மேதின நிகழ்வில் ஜனாதிபதி சூளுரை



(கொழும்பு)

இலங்கையின் ஜனநாயகம், சுதந்திரம் பற்றி வெளிநாடுகள் குறைகூறாத அளவுக்கும், அந்த விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிடாத வகையிலும் இன்னும் ஒரு வருடத்திற்குள் இங்கு பூரண ஜனநாயக்தையும், சுதந்திரத்தையும் ஏற்படுத்தி புதுயுகத்தை உருவாக்குவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டம் ஹைப்பார்க் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

புதிய ஆட்சி உருவாக்கப்பட்டு 100 நாட்களைக் கடந்துள்ள நிலையில் நாங்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். அதில் மிகப்பிரதானமான 19 ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் பூரண ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளோம்.

தொழிலாளர்களின் உரிமைகளையும், சிறப்பு உரிமைகளையும் பாதுகாப்பதற்காவே எனது அதிகாரங்களைப் பயன்படுத்துவேன். என்னை ஆட்சியில் அமர்த்திய மக்களைத் தவிர வேறு எவராலும் என்னை அசைக்க முடியாது.

நாட்டில் உருவாகியுள்ள அமைதியான நிலை தொடர வேண்டும். ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

பெரும்திரளான ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்த இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் நிமால சிறிபால டி சில்வா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, ராஜித சேனாரட்ன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டதுடன் மகிந்த ஆதரவு எம்.பிக்கள் சிலர் கலந்து கொள்ளவில்லை.

எனினும், மகிந்தாநந்த அளுத்கமகே, குமாரவெல்கம உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க புதிய வேலைத்திட்டம்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை, மொனராகலை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்களின் குடி நீர் பிரச்சினையைத் தீர்த்தல், சுக நலத்தை விருத்தி செய்தல் தொடர்பில் புதிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நீர் பெறுதலில் உள்ள பிரச்சினைகளை தீர்த்தல் மற்றும் தேசிய நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிகளை உறுதிப்படுத்துதல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்ளும் நோக்கில் உலக வங்கியின் கடன் உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# 20 ஆவது திருத்தத்தை எதிர்ப்போர் மக்களின் துரோகிகள்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக செயற்படுவோர் மக்களின் துரோகிகள் என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மின்சக்தி எரிசக்தி அமைச்சின் மே தின நிகழ்வு இன்று நேற்றுமுன்தினம் ராஜகிரியவில் இடம்பெற்றது.

இதன்போது, புதிய அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இன்னும் முழுமையடையவில்லை. தேர்தல் முறைமை மாற்றம் அடைந்த தன பின்னரே அது முழுமையடையும். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச் செல்லும் உரி[illegible]க் கட்சிக்கும் இல்லை.

உறுதியாகவே 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அ[illegible] எதிராக செயறபடும் அ[illegible]ம் மக்களின் துரோகிகளாக வரலாற்றில் இணைவார்கள் என்றார்.

# சிறுநீரகநோயை கட்டுப்படுத்தும் பாரம்பரிய நெல் விற்பனை

(கொழும்பு)

25 இலட்சம் கிலோ பாரம்பரிய நெல்லை கொள்வனவு செய்து கிலோ 90 ரூபா வீதம் விற்பனை செய்ய கமத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாரம்பரிய நெல் உற்பத்தியை ஊக்குவிப்பதுடன் நாட்டில் வேகமாக பரவும் தொற்றாத நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பாரம்பரிய நெல்லை 80 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

பாரம்பரிய பயிர்ச் செய்கை முறைகளிலிருந்து விலகி இரசாயனப் பதார்த்தங்களின் உள்ளீடுகளில் தங்கியிருக்கின்ற இன்றைய விவசாயிகளுக்கு பாரம்பரிய உணவுப் பயிர்ச் செய்கையிலிருந்து விலகியமை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமைத்தமை என்பன தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சிகளிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற ஹத்ஹித்த அதிகார சபை, உணவு ஊக்குவிப்பு சபை, மாவட்ட விவசாயத் திணைக்களங்கள் ஆகியவற்றின் பணிப்பாளர்களின் ஊடாகக் கொள்வனவு செய்து விற்பனை செய்யப்படவுள்ளது.

25 கிலோ கிராம் என்ற வீதத்தில் நெல்லை விதை நெல்லுக்காக சிறுநீரக நோய் பரந்துள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து விவசாயிகளுக்கு மத்தியில் விநியோகிப்பதற்கும், எஞ்சிய நெல்லை அரிசியாக உற்பத்தி செய்து விற்பனை செயயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

# நாடளாவிய சேவையில் SLPS - SLAS இரண்டும் ஒன்றே

## மனமாற்ற பேண்தகு நிலைக்கு இட்டுச் செல்லும்

இலங்கை நிர்வாக சேவை தரங்களில் உள்ள வெற்றிடங்களில் அகில இலங்கை திட்டமிடல் சேவையில் உள்ள (SLPS) அதிகாரிகள் வடக்கில் பணியாற்றுகின்றார்கள் என்ற செய்தி ஒன்று ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

நாடளாவிய சேவையில் (All Island Service) இலங்கை நிர்வாகசேவை, இலங்கை திட்டமிடல் சேவை மற்றும் விவசாயம், பொறி யியல், வெளிநாட்டு சேவைகள் என இலங்கையில் 16 இற்கும் மேற்பட்ட சேவைகள் உண்டு என்பதனை படித்தவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், அரசாங்க அதிகாரிகள் என யாவரும் அறிவர்.

நாடளாவிய சேவையில் பட்டதாரிகள், அரசாங்கத்தில் 10 வருட எழுதுநர் (MA) சேவைகள் அல்லது ஏதேனும் விசேட தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்கள், எழுத்துப்பரீட்சை, கட்டமைக்கப் பட்ட நேர்முக பரீட்சை ஒன்றின் ஊடாக தெரிவாகி சிலிடா (Slida) போன்ற பயிற்சி நிறுவனங்களில் விசேட நிபுணத்துவ பயிற்சிகளை பெற்றவர்களே பின்பு வகுப்பு III, II, I அதிவிசேடம் (Supra) போன்ற தங்களுக்கு ஊடாக முன்னேறி மக்களுக்கான பயனுள்ள சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

அதாவது இலங்கை நிர்வாக சேவை தரத்திற்கு உள்வாங்கி கடமை யாற்றி வருபவர்கள் மட்டும் தான் நிர்வாகத்தில் உயர்ந்தவாகள். எம்மால் மட்டுமே சிறந்த நிர்வாகத்தைக் கொண்டு செல்ல முடியும் என்ற வேண டத்தகாத மனமாற்றத்தை தன்னகத்தே உள்வாங்கி தம்மை அழித்து வரும் பிரிவினராக மாறிவிட்டனர். படிப்படியாக மாறியும் வருகின்றனர்.

உண்மையில் இலங்கையின் நிர்வாக திட்டமிடல் சாசன கோவையில் திட்டமிடல் சேவையினை சார்ந்த அதிகாரிகளுக்கு உள்ள பலம், அறிவு , தீர்மானத்திறன், முடிவெடுக்கும் ஆற்றல் (Smart) ஏனைய சேவையைச் சேர்ந்தவர்களிடம் போதுமானதாக இல்லையென்ற பொருளாதாரம் (Economics Dev. Journal) என்ற ஜேர்னலில் தெளி வாக கூறப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணத்தை நான் இலங்கை நிர்வாக சேவை அதிகாரி என்ற வகையில் கூறுவது பொருத்த மானது யாதென்றால், கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபரும் (Ga) வடமாகாணத்தின் பொதுநிர்வாக பிரதி பிரதம செயலாளரும் வடக்கு மாகாணத்தின் ஆளுநரின் பிரத்தியேக ஆலோசகராக இருந்து மிகப்பிரபலம் பெற்றவர் திருநாவுக்கரசு இராசநாயகம (Slps - சுப்புறா தரம்) அவர்கள் திட்டமிடல் சேவையின் சுப்புறா தர அதிகாரி (தி.இராசநாயகம் தற்போது ஒய்வுபெற்ற பின்னர் கிளிநொச்சி மகாதேவா சைவச் சிறார் இல்லத்தின் தலைவராக மிகச் சிறந்த அற்புத பணிகளை ஆற்றி வருகின்றார்.

2009 மே 19 இல் வன்னிப்போர் முடிவுற்ற காலத்தில் வன்னியில அமைக்கப்பட்ட முகாம்களுக்கு தலைமை அதிகாரியாகவும் நலவாரண மற்றும் சுகாதார, குடிநீர், நலன்புரி தேவைகளை உடன நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை ஜனாதிபதியின் பணிப்புரை யின் பேரில் வடக்கு (முன்னாள்) ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் அவருக்கு வழங்கப்பட்டு அந்த சிறப்பு பணியை முழுமையாக மேற கொண்டதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் 'மெச்சுரை' வழங்கப்பட்டு கௌர விக்கப்பட்டதை இந்த வடமாகாணம மட்டுமன்றி அகில இலங்கையும், அகில உலகமும் அறியும்.

இலங்கை நிர்வாக சேவை தரத்தில் (Slas) உள்ளவர்களை நாம் குறைந்தவர்கள் எனக் கூறுவதில்லை.

இன்று வடக்கில் எத்தனையோ அறிவாற்றல் படைத்த பல்வேறு சவால்களை எதிர்கொண்ட ஆனால் மன உழைச்சலுக்குள்ளான நிர்வாக சேவை அதிகாரிகள் பலமின்றி சேவையின்றி உள்ளனர்.

சிலர் ஏதோ பரீட்சையில் வந்து சேர்ந்து விடுகின்றனர். சேவை செய்யும் ஆற்றலோ, மக்கள் நலனோ, கீழ் உள்ள அலுவலர் நலனோ இல்லாத நிர்வாக அதிகாரிகளாக பணிபுரிகின்றனர்.

இன்னும் சிலர் நாம் எமக்கு கிடைத்த கடமையை மட்டும் செய்வோம். ஏனையவற்றை விலக்கவோம் என்ற தோரணையில் உள்ளனர்.

எனவே நிர்வாக கடமை என்பது வினைத்திறன் கொண்ட கல்விபடைந்த எவராலும் ஆற்றலாம். இதனால் தான் பட்டதாரிகளை அரசு முதன்மைப்படுத்துகிறது. இதற்கு ஏற்றால் போல வடமாகாண சபையில் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெகநாதன் அவர்கள் வடக்கின் உள்ளூராட்சி சபை நிர்வாகத்தை பொறுப்புடன் நடாத்த 10 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக உள்ளூராட்சியல் சேவை செய்தவர்களை செயலாளர்களாக நியமனம் செயய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி செயலுருவாக்கியுள்ளார்.


இவ்வாறான கடமை என்பது இவர்களுக்குத்தான் உரியது. நிர்வாகம் என்பது மட்டுப்படுத்தப்பட்ட சேவை என்பது எல்லாம் ஒரு மாஜாஜாலத் திட்டம்

வடமாகாணம் சிறந் தநிலையை அடைய பதவிகள் சேவைகளை முன்னிறுத்தினாலும் மாற்றம் ஒன்றே உன்னத சேவைக்கு வழிவகுக்கும்.

எனவே எது எப்படியிருப்பினும் பட்டதாரிகளாக வெளிவந்த இலங்கை நிர்வாகசேவை (Slas) தரத்தினரும் இலங்கை திட்டமிடல் சேவை (Slps) தரத்திற்கும் மாறுபாடுகள், பட்டங்கள், பதவிகளை, மனக்கிலேசங்களைக் களைந்து உன்னத மக்கள் சேவைக்கு தயாராகுங்கள். அதுவே அபிவிருத்திக்கும் பேண்தகு நிலைக்கும் சிறந்த வழிகாட்டியாகும்.

இரா.செல்வராஜா
ஓய்வூதியர் Slas

# கஸகஸ்தான் ஜனாதிபதியாக நூர்சுல்தான் நஸர்பயேல் தெரிவு



கஸகஸ்தானில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 97.7% வாக்குகளைப்பெற்று ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார் நூர்சுல்தான் நஸர்பயேவ்.

இவ்வரை எதிர்த்துப் போட்டியிட்டு படுதோல்வியைத் தழுவிய அபேல்கஸி கஸிநோவ் மற்றும் டுர்கன் சிஸ்டிகோவ் ஆகியோர் முறையே 0.7% மற்றும் 1.6% வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

கஸகஸ்தானில் 550 வாக்கெடுப்பு நிலையங்களில் இடம்பெற்ற இந்த ஜனாதிபதித் தேர்தலில் 95 வீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தல் மிக நேர்மையாகவும் அமைதியாகவும் இடம்பெற்றதாக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

நூர்சுல்தான் நஸர்பயேவின் இந்த அபார வெற்றி, அந்நாட்டு மக்கள் அவர்மேல் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இலங்கைக்கான கஸகஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.



நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்க இடிபாடுகளுக்குள் இருந்து 22 மணி நேரத்தின் பின் மீட்கப்பட்ட 4 மாதக் குழந்தை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- மரண தண்டனை எதிரொலி -

# அவுஸ்ரேலிய அருங்காட்சியகத்தில் இந்தோனேஷிய அதிபரின் படம் நீக்கம்

அவுஸ்ரேலியர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதால் அலுஸ்ரேலிய தலைநகர் கண்பெராவில் தேசிய புகைப்பட அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோவில் புகைப்படம் அகற்றப்பட்டுள்ளது.

அவுஸ் ரேலிய தலைநகர் கன்பெராவில் தேசிய புகைப்பட அருங்காட்சியகம் உள்ளது. இதில் உள்நாடு மற்றும் சர்வ தேச தலைவர்களின் புகைப் படங்கள் மற்றும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. அதன்படி இந்தோனேஷிய அதிபர் ஜோகோ விடோடோவின் புகைப படமும் இந்த அருங்காட்சிய கத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.



அவுஸ்ரேலியர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதால், நாடு முழுவதும் இந்தோனேஷிய எதிர்ப்பு அலை வீசி வருகிறது. இதனால் இந்தப் புகைப் படத்தை அருங்காட்சியக நிர்வாகம் அகற்றிவிட்டது. அருங்காட்சியகத்தில் உள்ள மற்ற கலைப்பொருட்கள் மற்றும் அங்கு வரும் பார்வையாளர்களின பாதுகாப்புக்காக இந்த புகைப்படத்தை எடுத்து விட்டதாக அருங்காட்சியக இயக்குநர் அங்குஸ் ட்ரம்பிள் கூறினார்.

# போதைப்பொருள் கடத்தியவருக்கு தலைவெட்டி மரண தண்டனை

சவுதி அரேபியா நாட்டில் மத துவேஷம், கொலை, கற்பழிப்பு, போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஆயுதமேந்திய கொள்ளை ஆகிய கொடும் குற்றங்களுக்கு இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின்படி மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

அவ்வகையில், இங்குள்ள ரியாத் மாகாணத்துக்குள் ஹெராயின் கடத்தி வந்த பாகிஸ்தானியரான ஷிரின் கான் அப்பாஸ் கான் என்பவர் மீது நடைபெற்ற வழக்கில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று முன்தினம் ரியாத் நகரில் அவரது தலையை துண்டித்து தண்டனை நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஆண்டு முழுவதும் 87 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில் இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் சவுதியில் 73 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களை கொதிப்படையச் செய்துள்ளது.

உலகச் செய்திகள்

# புவி வெப்பமடைவதால் உயிரினங்கள் அழியும் அபாயம்



புவி வெப்பமடைதல் காரணமாக உலகிலுள்ள உயிரினங்களில் 13 இல் ஒன்று முற்றிலுமாக அழியும் என அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கனக்டிக்கட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சூழலியல் வல்லுநர் மார்க் அர்பன், புவி வெப்பமடைதலால் உயிரினங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட 131 ஆய்வுக் கட்டுரைகளைப் பகுப்பாய்வு செய்தார்.

அந்தப் பகுப்பாய்வின் முடிவில் அவர் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் புவி வெப்பமடைவதால் உலகிலுள்ள பல்வேறு உயிரினங்கள் முற்றிலுமாக அழிந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, சராசரியாக சுமார் 7.9 சதவீத உயிரினங்கள் அழியும் என கணக்கிடப்பட்டுள்ளது.

அதாவது, 13 உயிரினங்களில் ஒரு உயிரினம் அடியோடு அழியும்.

இந்த விகிதம் வட அமெரிக்காவில் குறைவாகவும் (20 உயிரினங்களுக்கு ஒன்று), ஐரோப்பாவில் அதைவிட மிகக் குறைவாகவும் உள்ளது.

ஆனால், புவி வெப்பமடைதல் காரணமாக தென் அமெரிக்காவில் உயிரினங்கள் அடியோடு அழியும் விகிதம் 23 சதவீதமாக (ஐந்து உயிரினங்களுக்கு ஒன்று) இருக்கும்.

மற்ற எந்தக் கண்டத்தை விடவும், தென் அமெரிக்காவில்தான் புவி வெப்பமடைதல் காரணமாக அதிக விகிதத்தில் உயிரினங்கள் அடியோடு அழியும் என பகுப்பாய்வின் முடிவில் கூறப்பட்டுள்ளது.

தற்போது வளிமண்டலத்தில் கரியமில வாயு கலக்கப்படும் அளவு நீடித்தால், இந்த நூற்றாண்டின் முடிவில் உலகில் இருக்கும் உயிரினங்களில் 6 இல் ஒன்று முற்றிலுமாக அழிந்துவிடுவதற்கான வாய்ப்பு உள்ளது என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அடிவயிறை கலக்கும் அதிசய பாலம்



சாதாரணமாக பாலங்களின் வடிவமைப்பு வாகனங்கள் எளிதாக ஏறி, இறங்கும் விதத்தில் அமைக்கப்படுவதுண்டு. ஆனால், அந்த இடத்தின் நில அமைப்பு, கட்டடங்கள் போன்றவற்றை கருதி, வளைவு நெளிவுகளுடன் மாற்றி அமைக்கின்றனர்.

இந்த நிலையில், ஜப்பானில் கட்டப்பட்டிருக்கும் ஒரு பாலம் தினசரி, அதில் செலலும் வாகன சாரதிகளை அடிவயிறு கலங்க வைக்கிறது. அந்தளவு இந்த பாலத்தை சரிவாக அமைத்துள்ளனர்.

திருவாரூரில் இருக்கும் ஒரு ரயில்வே மேம்பாலத்தை மரண பாலம் என்று கூறுவதுண்டு. அதுபோன்று, இந்தப் பாலமும் வாகன சாரதிகளை கதிகலங்க வைக்கிறது.

ஜப்பானிலுள்ள மேட்சூ மற்றும் சகைமினாட்டோ நகரங்களுக்கு இடையில் இருக்கும் ஏரியின் மீது இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒஹாஷி என்று பெயர். உலகின் மூன்றாவது பெரிய பாலமாக இதனைக் குறிப்பிடுகின்றனர். 1.7 கி.மீ நீளமுடைய இந்தப் பாலம் 11.4 மீற்றர் அகலம் கொண்டது. முழுவதும் கொங்கிறீட் மூலமாக அமைக்கப்பட்டுள்ளது.

பாலங்கள் பெரும்பாலும் படிப்படியாக உயரம் அதிகரிக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்த பாலம் 6.1 சதவீதம் சரிவுடன் கட்டப்பட்டுள்ளது. இது வழக்கத்தைவிட மிக அதிகமான சரிவுகொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. மலைச்சாலைகளில் செல் வதை விட ஓட்டுநருக்கு கடினமானதாக இருக்கும்.


இந்த பாலத்தின் கீழே கப்பல்கள் செல்வதற்கு வசதியாக இந்த அளவு செங்குத்தாக கட்டியுள்ளனராம்.

இந்த பாலம் ஜப்பானில் மட்டுமல்ல, உலக அளவில் ஈர்க்கப்படும் முக்கிய சுற்றுலாத் தலமாக மாறியிருக்கிறது.

மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் மட்டுமே செல்லவேகவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா விவசாயக்கல்லூரியில் குறைபாடு நிவர்த்திக்கக் கோரி மகஜர்

வவுனியா விவசாயக்கல்லூரியில் விரிவுரையாளர் பற்றாக் குறையினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அக்கல்லூரி மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



வவுனியா விவசாயக்கல்லூரி மாணவர்கள் இந்த கோரிக்கையினை வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வவுனியா விவசாயக்கல்லூரியில் இருந்து வருகை தந்த சுமார் 50இற்கும் மேற்பட்ட விவசாய மாணவர்கள் வடமாகாண விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

அந்த சந்திப்பின் போது, வவுனியா விவசாயக் கல்லூரியில் விரிவுரையாளர்கள் பற்றாக்குறையினால், விரிவுரைகள் சீராக இடம்பெறவில்லை. இதனால் கற்கை நெறிகளை தொடர்வதில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்வதுடன், இந்த நிலை கடந்த பல தசாப்தங்களாக இடம்பெறுகின்றதாகவும் மாணவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

விவசாயக் கல்லூரியில் 3 விரிவுரையாளர்கள் இருப்பதனால், விரிவுரையாளர்களுக்கு குறித்து ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலாக விரிவுரைகள் நடைபெறுவதில்லை என்றும் குறிப்பிட்டனர்.

இதனால், தாம் மட்டுமன்றி எதிர்காலத்தில் விவசாய கல்லூரிக்கு உள்வாங்கப்படும் மாணவர்களும் விரிவுரையாளர்கள் இல்லாததினால் பாரிய இழப்புக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கூறியதுடன், தமக்கு நிரந்தரமாக விவசாய விரிவுரையாளர் ஒருவரை நியமிப்பதற்கு ஆவண செய்யுமாறும் கோரிக்கை விடுத்ததுடன், வடமாகாண விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

தமக்கு தமிழ் மொழி மூல விரிவுரையாளரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அந்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் மத்திய அரசாங்கத்துடன் கதைத்து விரிவுரையாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (25)

# ஹெரோயின் வழக்கில் பொலிஸ் பரிசோதகர் இடைநிறுத்தப்பட்டார்

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் கான்ஸ்டபிள் சிசேர என்பவரே இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் யாழ். நகரப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த இளைஞர்களுக்கு யாழ்.நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி பிணை வழங்கியதுடன், வழக்கினை ஒத்திவைத்தார்.

மேற்படி வழக்கினை யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் பிணை வழங்கிய இரு இளைஞர்களையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு நீதிமன்றினால் மீண்டும் விளக்கமறியலில் இரு இளைஞர்கள் வைக்கப்பட்டமையுடன், ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் தமிழ் இளைஞர் ஒருவருக்கு இந்தோனேசியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டதனையும் சுட்டிக் காட்டி, பொலிஸாரின் நடவடிக்கையில் அதிருப்தியையும் வெளியிட்டிருந்தார்.

அத்துடன், ஹெரோயின் வழக்கில் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத பொலிஸ் அதிகாரியின் பொறுப்பினை தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றினை நீதிமன்றிற்கு சமர்ப்பிக்குமாறும் யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபருக்கு கட்டளையிட்டார். அதன் பிரகாரம் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் பொலிஸ் திணைக்களத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (25)

# தமிழக மீனவர்கள் விவகாரம்; கருத்தை திரித்த ஊடகங்கள்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

இலங்கை கடல் எல்லைக்குள் வருபவர்கள் மீது சர்வதேச சட்டப்படி சுடுவதற்கு வாய்ப்புள்ளது என்று மட்டுமே பிரதமரும், நானும் கூறினோமே தவிர தமிழக மீனவர்களை சுடுவோம் என்று நாங்கள் கூறியதுபோல சில ஊடகங்கள் அதனை திரித்து வெளியிட்டுவிட்டன என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு திருநள்ளாறில் அமைந்துள்ள தர்பாரண்யேசுவரர் கோயிலுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அமைச்சர் சுவாமிநாதன் அங்கு செய்தியாளர்களிடம் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழர்கள் மற்றும் சிங்கள மக்கள் சுமுகமாக வாழ ஜனநாயக வழியில் நடவடிக்கை மேற்கொள்வதுதான் எங்கள் அரசின் கொள்கை. தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதோ, இந்தியாவுக்கு எதிராக செயற்படுவதோ எங்கள் நோக்கமல்ல.

இரு நாட்டு மீனவர்களும் வங்கக்கடலில் சுமுகமான முறையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தியின்...

இந்த அமைதியான மற்றும் ஜனநாயக புரட்சியானது அரபு புரட்சியுடன் ஒப்பிடும் போது மாறானது. ஏனைய நாடுகளுக்கு இது முன்மாதிரியாக அமைந்துள்ளது.

இலங்கையர்கள் இந்த மாற்றத்திற்கான துப்பாக்கி தோட்டக்களையோ, கல்லையோ, தடிகளையோ எடுக்கவில்லை. தமது ஐக்கியமான வாக்குகளையே பயன்படுத்தினர்.

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் முதல் 100 நாட்களில் சட்டத்தின் ஆட்சி,அடிப்படை சுதந்திரம் மற்றும் நல்லாட்சியின் முக்கியத்துவம் உறுதிப்படுத்தப்பட்டது.

இன்று நாங்கள் அனுபவிக்கும், அன்று இரத்தம், கண்ணீர், வியர்வை சிந்தி பெற்றுக்கொண்ட சுதந்திரதைதை பாதுகாத்து கொள்ளும் முக்கியத்துவத்தை இன்று நாங்கள் புரிந்து கொண்டிருக்கின்றோம்.

100 நாள் வேலைத்திடத்தின் முழு வெற்றியை அண்மையில் 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம் முழுப் பலனையும் பெற்றோம். இதற்கு எதிராக ஒரு வாக்கு மட்டுமே கிடைத்தது எனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கிணற்றில்...

அடிப்பட்டு, கிணற்றிற்குள்ளே உயிரிழந்துள்ளார்.

கிணற்றிற்கு குளிக்கச் சென்ற பொலிஸார் ஒருவர் வழங்கிய தகவலின் பிரகாரம் குறித்த பொலிஸாரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (25)

## அதிகாரப்பகிர்வு..

உலகின் எந்தவொரு நாடும் மிகத் துல்லியமான மனித உரிமைகளைப்பேணுவதில்லை அமெரிக்காவிலும் அதே நிலைமையே உள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தக் குற்றங்கள் குறித்த எந்தவொரு முறையான விசாரணைகளுக்கும் இலங்கைக்கு உதவத் தயாராகவுள்ளது.

அத்துடன் ஜனநாயகம் மற்றும் மனித.உரிமைகளை ஊக்குவிப்பது குறித்த புதிய அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மைகளை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர , அமெரிக்கா வுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியாவுக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் மற்றும் வெளிவி வகார அமைச்சு அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றார்.

இதன்பின்னர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்த ஜோன்ஹெறி பேச்சுக்களை நடாத்தினார்.

## பொறுப்புக்கூறும்..

லிணக்கச் செயல்முறைகளின் முக்கிய கூறாக, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்திக் கொள்ளும் விடயம் அமைந்திருக்கும்.

எமது தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி, பொறுப்புக்கூறுவதற்கான உள்நாட்டுப் பொறிமுறையை அனைத்துலக தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப் படுகின்றன.

பல்வேறு பகுதிகளைக் கொண்ட இந்த விடயத்தில், உள்ளூர் திறனை விரிவாக்குவதற்கும்,தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் வழங்குவதற்கு அமெரிக்கா எமக்கு உதவ முடியும்.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெறி, இலங்கையில் நடத்தும் பேச்சுக்கள், இரண்டு தரப்பும் தமது முன்னுரிமைகள் குறித்து புரிந்து கொள்வதற்கான வாய்ப்பை வழங்கும் என்று நம்புகிறேன்.

இந்தப் பேச்சுக்கள், தற்போதுள்ள நெருக்கமான நட்புறவை மேலும் உச்சத்துக்கு கொண்டுசெல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஊழலை..

கலந்துரையாடினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனவரி மாதம் 8ஆம நாள் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், வெற்றிபெற்றதற்கு, அமெரிக்க இரா்ஜாங்கச் செயலர் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டதுடன் புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தனது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்லத் தேவையான சகல உதவிகளையும் இலங்கை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் பொருளாதார பங்களிப்பு தொடர்பில் ஜனாதிபதி இதன் போது, அமெரிக்க இராஜாங்க செயலாளரிடம் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள், பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு, உழல்களை கட்டுப்படுத்துவது குறித்து பயிற்சி அளிக்குமாறு இதன்போது மைத்திரிபால சிறிசேன முன்வைத்த கோரிக்கைக்கு, ஜோன் ஹெறி விருப்பம் தெரிவித்துள்ளார்.

## இயற்கை...

அபிவிருத்தி அலுவல்களை மேற்கொள்ளல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்ற 25 இற்கு மேற்பட்ட அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

யு.என்.டி.பி. இதற்கான நிதியை வழங்கவுள்ளது. மேலும் செயல் நுணுக்க சூழல் மதிப்பீட்டின் கீழ் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் யானை - மனிதன் மோதலைக் கட்டுப்படுத்தல், ஈரலிப்பு நிலத்தைப் பாதுகாத்தல், புலம்பெயர் பறவைகளின் பயண வழிப்பாதையைப் பாதுகாத்தல், உயிரியல் பல்வகைமையைப் பேணிப்-பாதுகாத்தல் மற்றும் சூழல் அபிவிருத்தி அலுவல்களின் விருத்தி என்பனவற்றை மையமாகக் கொண்டு வன ஜீவராசிகள் ஒதுக்கிடங்களைப் பிரகடனப்படுத்தப்பட வேண்டிய பிரதேசங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

## தேசிய...

இனங்களுக்கிடையில் சமாதானமும் ஐக்கியமும் இன சமத்துவமும் இன்னமும் வளர்ந்து செழிக்க வேண்டும்.அவ்வாறான சூழலே சகல மக்களும் சகல உரிமைகளும் பெற்று இன்னமும் அதிகமாக நிமிரந்தெழும் காலத்திற்கான திறவு கோல் ஆகும்.

சமூக பொருளாதார அபிவிருத்தியில் இலங்கைத் தீவு மேலும் சிறந்து விளங்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சுதந்திர தின உரையில் கூறியதுபோல், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் தேசிய நல்லிணக்கம் வளர்க்கப்பட வேண்டும்.

இதற்காக நாம் அனைவரும் ஜனாதிபதி பலம் சேர்த்து, அர்ப் பணிப்புடன் உழைக்க வேண்டும். அதன் ஊடாக இந்நாட்டின் ஒவ்வொரு குடி மக்களும் வாழ்வியல் உரிமையின் உயர்வுகளை எட்டவேண்டும்.

உழைக்கும் மக்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை என்ற நிலைமைகள் இன்னமும் மாற்றமடைய வேண்டும். உழைப்பே வாழ்வின் மூலதனம். அதை ஏற்று தொழிற்றுறைகளை ஊக்குவித்து சகலரும் வேலை வாய்ப்பு பெற்று உழைப்பதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

இது எங்கள் நாடு என்ற உரிமை கோசம் ஒவ்வாரு மக்களின் மனங்களிலும் குடி கொள்ள வேண்டும்.ஒவ்வொரு மக்களும் சகோ தர மக்களே என்ற சமத்துவ எண்ணங்கள் சகல மக்களிடையேயும் பரஸ்பரம் வளர வேண்டும்.அழுதும் பிள்ளையை அவளே பெற வேண்டும் என்பதுபோல், எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். எம்மிடையே பரஸ்பர நம்பிக்கையினை வளர்க்காது வெளிநாடுகளை நாடிக் கொண்டிருப்பதில் பய னில்லை. வெளிநாடுகள் வேண்டுமானால், மருத்துவிச்சியின் பணியைச் செய்யலாம்.

சகல மக்களுக்கும் பொருளாதாரத்தில் சமத்துவம்,அரசியலில் சமவுரிமை என்ற நிலைமைகள் தோன்ற வேண்டும்.

அதற்காக நாம் உண்மையாகவும், நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையோடும் தொடர்ந்தும் உழைப்போம்.

வெல்க மேதினம்! ஓங்குக உழைக்கும் மக்களின் ஒற்றுமை! வளர்க இன சமூக நல்லிணக்கம்! எனத் தெரிவித்தார்.

# உயர்தொழில்நுட்ப பட்டதாரிகள் நியமனம் வழங்குமாறு போராட்டம்



(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டப் படிப்பை நிறைவுசெய்த பட்டதாரிகள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று சனிக்கிழமை நல்லூர் ஆலயச் சூழலில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த 2012ஆம் ஆண்டு தமது நிரந்தர நியமனம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் 228 பட்டதாரிகள் ஒன்றிணைந்து வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து கடந்த 2013ஆம் ஆண்டு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பு வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்தும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்த பட்டதாரிகள் ஒன்றிணைந்து அமைதியான முறையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (25)

# ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர்

## மண்டீப்சிங்கின் அதிரடியில் பெங்களூர் அபார வெற்றி

மண்டீப் சிங்கின் கலக்கலான அதிரடி ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் பெங்களூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐபிஎல் தொடரில் பெங்களூரில் நடந்த நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா பெங்களூர் அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித்தலைவர் ஹோலி களத்தடுப்பை தெரிவு செய்தார்.

பெங்களூரில் மழை பெய்ததால் போட்டி 2.45 மணி நேரம் தாமதமாகத் தொடங்கியது. இதன் பின்னர் 20 ஓவர்கள் 10 ஓவர்களாக குறைக்கப்பட்டு போட்டி தொடங்கியது.

முதலில் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு உத்தப்பா, கம்பீர் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். கம்பீர் 12 ஓட்டங்களும், உத்தப்பா 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த ரசல் அதிரடியாக விளையாடி 17 பந்துகளில் 45 ஓட்டங்களைக் (5 பவுண்டரி, 3 சிக்சர்) குவித்தார். டஸ்சாட்டி 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, யூசுப் பதான் (11), சூரிய குமார் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


கொல்கத்தா அணி 10 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 111 ஓட்டங்களை குவித்தது.

இதன் பின்னர் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு கிறிஸ் கெய்ல் (21), அணித்தலைவர் விராட் கோஹ்லி (34) நல்ல தொடக்கம் தந்தனர்.டிவில்லியர் அதிரடி காட்டு வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்

அடுத்து வந்த மன்தீப் சிங் அதிரடியா விளையாடி 18 பந்துகளில் 45 ஓட்டங்கள் (4 பவுண்டரி, 3 சிக்சர்) எடுத்தார்.

இதனால் பெங்களூர் அணி 9.4 ஓவர்களில் 115 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக அதிரடியில் கலக்கிய மண்டீப் சிங் தெரிவானார

# மூன்றாவது மீட்புக்குழுவும் நேபாளம் சென்றது



(கொழும்பு)

நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மீட்பு பணிகளுக்காக இலங்கையிலிருந்து மற்றுமொரு குழு நேற்று கொழும்லிருந்து புறப்பட்டு சென்றது.

நேற்றுக் காலை 10.45 அளவில இலங்கை விமானப்படைக்கு சொந்தமான விமானம் ஒன்றிலேயே குறித்த மீட்புக் குழு புறப்பட்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குழுவினர் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் மருந்துப் பொருட்கள் அடங்கிய பொதிகள் என்பன வற்றை எடுத்து சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை இலங்கையிலிருந்து ஏற்கனவே இரண்டு உதவிக் குழுக்கள் நேபாளத்திற்கு சென்றுள்ள நிலையில், நேற்று சென்றுள்ள குறித்த குழு மூன்றாவது குழு என்பது குறிப்பிடத்தக்கது.

# கேடமிடில்டனுக்கு பெண் குழந்தை

கேம்பரிடஜ் சீமாட்டி கேட் மிடில்டனுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய இளவரசர் வில்லியம்ஸ், கேட் மிடில்டன் ஆகியோருக்கு ஏற்கனவே ஓர் ஆண் குழந்தை உள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்த ஆண் குழந்தைக்கு ஜோர்ஜ் எனப் பெயரிட்டனர்.

தற்போது பிறந்துள்ள பெண் குழந்தை நான்காவது முடிக்குரிய இளவரசியாகும்.

# திறப்பு விழா

கரவெட்டி தாழங்குழியில் அமரர் சி.செல்லத்துரை விளையாட்டு அரங்கின் திறப்பு விழா இன்று மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மத்தொனி இளைஞர் விளையாட்டுக்கழகத் தலைவர் செ.தினேஷ குமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு கலந்துகொள்ளவுள்ளதோடு சிறப்பு நிகழ்வாக மகேசன் மற்றும் மத்தொனி விளையாட்டு கழகத்தினரின் சினேகபூர்வ துடுப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (18)

# வோர்ணரின் அதிரடியில் மண்டியிட்டது சென்னை



(ஹைதராபாத்)

வோர்ணரின் அதிரடியான துடுப்பாட்டம் கைகொடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 22 ஓட்டங்களால் வெற்றி கொண்டது சன்ரைஸஸ் ஹைதராபாத்.

ஹைதராபத்தில் நேற்று நடைபெற்ற 34 ஆவது போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டோனி களத்தடுப்பை தீர்மானித்தார். இதற்கமைய துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத்தின் வோர்ணர், தவான் சிறப்பான அடித்தளத்தை இட்டனர். இதிலும் வோர்ணரின் ஆட்டத்தில் அனல்பறந்தது.

8 ஆவது ஓவரில் அணி 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை 28 பந்தில் ஒரு சிக்ஸர், 11 பவுண்டரிகள் அடங்கலாக 61 ஓட்டங்களைப் பெற்ற வொர்ணர் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஹென்றிகுயிஸ் 19, தவான் 37, நமன் ஓயா 20, ஆட்டமிழக்காமல் மோர்க்கன் 32 ஓட்டங்களைப் பெற சன்றைஸஸ் ஹைதராபாத் 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பிறாவோ 3 நெகி, நெக்ரா, ரெய்னா ஆகியோர் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 193 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்னை அணிக்கு சன்றைஸஸ் வீரர்களின் பந்துவீச்சு, களத்தடுப்பு என்பன சிம்மசொற்பனமாக விளங்கியது. இதனால் அவ்வணி வீரர்களால் பெரிதாக ஓட்டக் குவிப்பில் ஈடுபடமுடியவில்லை.

இதில் அதிகபட்சமாக டுபிளஸிஸ் மட்டும் 33 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் சென்னை அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் புவனேஸ் குமார், ஹென்றிகுயிஸ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர் ஆட்டநாயகனாக வோர்ணர் தெரிவானார்.

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் சின்னம்மா

வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லம்மா அவர்கள் 01.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற ஆறுமுகம் சின்னம்மா அவர்களின் அன்பு மகளும், காலம் சென்ற சின்னக்குட்டி பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும், மகேஸ்வரி (ஓய்வு பெற்ற தபாலதிபர்), நடேசன் (மின்மானி வாசிப்பாளர் யாழ்ப்பாணம்), செல்வரத்தினம் (ஜேர்மன்), காலம் சென்ற மங்களேஸ்வரராணி (ஆசிரியர், சமாதான நீதவான்) செல்வனேஸ்வரி (முன்னாள் வேலணை ப.நோ.கூ.சங்க பணியாளர்), புஸ்பகாந்தி (சுவீஸ்), செல்லத்தவம் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலம் சென்ற சண்முகவடிவு (ஆசிரியர்), குலநாயகி (போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), செல்வநாயகம், சிவரங்கராசா ( தனியார் பேருந்து சாரதி), வரதராசா (சவீஸ்), சிவநேசன் (இலண்டன்), உமாதேவி(ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார். டயானந், பிரசாத், கிரிசாந், கவிதா, சூரியா, தாஸ், நிவிதோ, அருந்ததி, ஜயவகர், கவானா, மதுசா, லக்சன் ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று 03.05.2015 காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரிகைக்காக துறையூர் தாளையங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பிள்ளைகள்

# திருடப்பட்ட பொருட்களுடன் சுன்னாகத்தில் நால்வர் கைது



யாழ். சுன்னாகம் பகுதியில் திருடப்பட்டிருந்த பெருமளவு இலத்திரனியல் பொருட்களுடன் மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதுகுறித்து கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சுன்னாகம் மயிலங்காடு பகுதி வீடொன்றில் நடத்திய தேடுதலின்போதே இலத்திரனியல் பொருட்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களில் 12 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 42 அங்குல தொலைக்காட்சி, இலத்திரனியல் அடுப்புகள், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருட்கள் அடங்குகின்றன.

சுமார் நான்கு இலட்சம் ரூபா விற்கும் அதிக பெறுமதியுடைய பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மல்லாகம் நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 14 ஆம் திகதி வரை சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மீட்கப்பட்டுள்ள இலத்திரனியல் பொருட்களை அடையாளம் காண்பதற்கு சுன்னாகம் பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.